மேழிச்செல்வம்

மாத இதழ்



சுபகிருது௵ பங்குனி௴

தமிழ்நாட்டில் அமெரிக்க விவசாயிகள்

அமெரிக்க விவசாயிகளுடன் மாநில வேளாண்மைத் துறை அமைச்சர், உணவு விவசாயத் துறை காரியதரிசி, கால் நடைத் துறை நெறியாளர், விவசாயிகள் மன்றக் காரியதரிசி, மாநில விவசாயச் செய்தி அலுவலர் முதலியோர்.

விலை 25 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

[1963-ம் ௵ மார்ச்-ஏப்ரல் ௴



படம் 1

படம் 2

மார்ச்சு 21-ம் தேதியன்று ராஜாஜி மண்டபத்தில் உணவு பெருக்க வார விழா.

படம் 3

படம் 1.—மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் உரை நிகழ்த்துகிறார்.

படம் 2.—கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி முதல்வர் திருமதி ராஜம்மாள் தேவதாஸ், சென்னை மேரி ராணி கல்லூரி முதல்வர் குமாரி ஐராவதி, சென்னை பெண்கள் கிறிஸ்துவ கல்லூரி மனையியல் பேராசிரியர் டாக்டர் ஃபிளாரன்ஸ் தியா.ஃபிலஸ்.

படம் 3.—விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்த பிரமுகர்கள்.

படம் 4.—டாக்டர் திருமதி எச். எம். சர்மா, மாநில பொது சுகாதாரத் துறை நெறியாளரும் உரை நிகழ்த்தி, கலந்து கொண்டார்.

படம் 5.—ஊர்வலத்தில் அணிவகுத்துச் செல்லும் A. C. C. மாணவிகள்.

படம் 4

பாம் 5

உள்ளுறை

	பக்கம்.
உணவு பெருக்க உலக இயக்கம்	5
பஞ்சாயத்துக்களில் விவசாய உற்பத்தி திட்டங்கள்	7
கருங்கண்ணிப் பருத்தி சாகுபடியில் அதிக மகசூல் பெரும் வழி	9
தமிழ்நாட்டில் அமெரிக்க விவசாயிகள்	9
தமிழ்நாட்டில் பருத்திப் பெருக்கத் திட்டத்தின் பத்து ஆண்டுச் சாதனைகள் ..	10
நெற்பயிருக்கு மணிலா கொட்டை புண்ணுக்கு	12
மலைப் பிராந்தியங்களில் மண்வளப் பாதுகாப்பும் நீலகிரி ஜில்லாவில் அதன் முக்கியத்துவமும்.	14
தனியார் பழச்செடி நாற்றங்கால்கள்	16
தொழு உரமும் அதன் நன்மைகளும்	18
விவசாயச் செய்திக் கதிர்	20
விவசாயத் துறை செய்தி	21
சித்திரை—வைகாசி மாத விவசாயக் குறிப்புகள்	22
வருவாய்த் துறை கழகம் (Board of Revenue) விவசாயிகளுக்கு வழங்கு ம்சலுகைகள்	24
1963-ம் ஆண்டு ஜனவரி மாதத்திய காலநிலை அறிக்கை	26
கிராமத் தொண்டர் படையின் சிறந்த பணி	27
ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்	28

விளம்பரங்கள் :

மெட்ரிக் முறை	4
கோத்தாரியின் சூப்பர்பாஸ்பேட்	11
பொட்டாஷ்	13
பேயர் அக்ரோ கெம் லிமிடெட்	17
ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி..	19, 25
பாரி அண்டு கோ	23
வால்டாஸ்	30

வேளாண்மைத்துறை நெறியாளர் திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., பொது சுகாதாரத் துறை நெறியாளர் டாக்டர் திருமதி எச். எம். சர்மா, கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி முதல்வர் திருமதி ராஜம்மாள் தேவதாஸ், மேரி ராணி கல்லூரி முதல்வர் குமாரி ஐராவதி, பெண்கள் கிருஸ்துவ கல்லூரி மனையியல் பேராசிரியர் டாக்டர் ஃபிளாரன்ஸ் தியாஃபிலஸ், கோழி வளர்ப்புத் திட்ட அதிகாரி திரு எல். பி. ராமசாமி, முதலியோர் உரையாற்றினர்கள்.

உலக மக்கள் அனைவருக்கும் போதிய அளவு சத்துள்ள உணவு கிடைக்கச் செய்வதே இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் என்றும், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், பாரத் கிருஷிக் சமாஜம், இளைஞர் விவசாயிகள் சங்கம் போன்றவை நேரிடையாக உணவு பெருக்கத் திட்டங்களில் சிறந்த பங்கு கொள்ளவேண்டும் என்றும் அமைச்சர் தம் உரையில் குறிப்பிட்டார். உலக மக்களுக்கும் நம் நாட்டு மக்களுக்கும் போதிய உணவு கிடைக்க பாடுபட்டு உணவு பற்றுக்குறையை நீக்கி உதவுமாறு அனைவரையும் அமைச்சர் கேட்டுக் கொண்டார். உலகில் உள்ள முன்னூறு கோடி மக்களும் சுகாதார முறையில் தங்கள் உடலைப் பாதுகாக்க பரிபூரண சத்துள்ள உணவை உட்கொள்ளவேண்டும்; ஜனத்தொகை பெருக்கத்திற்கும் அதிகமான உணவை உற்பத்தி செய்ய வேண்டும்; நியாயமான விலையில் உணவை மக்களுக்கு காலா காலத்தில் கிடைக்கச் செய்யவேண்டும்; மக்கள் உணவை நல்ல முறையில் காத்து விரயமாவதை தடுக்கவேண்டும்; எந்த துறையில் இருந்தாலும் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற முறையில் இந்த வழிகளில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வேளாண்மைத்துறை நெறியாளர் தமது உரையில் கூறினர்.

சோற்றினின்றும் வடித்த கஞ்சியிலும், காய்கள் வெந்த நீரிலும் அதிக சத்து இருப்பதால் கஞ்சி வடிக்காதிருக்க வேண்டும் என்றும் காய்கள் வெந்த நீரை பலவிதங்களிலும் நாம் உணவுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் திருமதி ராஜம்மாள் தேவதாஸ் அறிவுறுத்தினர். அடுத்து பேசிய பொது சுகாதார நெறியாளர் டாக்டர் சர்மா, தொடர்ந்து பசிப்பிணியால் வருந்துவோரை எளிதில் நோய் பீடிக்கும்; ஆதலால் உடல் நலத்திற்கும், மன ஆரோக்கியத்திற்கும், சமூக நலத்திற்கும், சமசத்துள்ள உணவு அவசியம் என்றும், மனித சமுதாயத்தையே எதிர்நோக்கி இருக்கும் உணவு பற்றுக்குறை பிரச்னையை நீக்கி பசிப்பிணியினின்றும் விடுதலை பெறவே இந்த பசிப்பிணி இயக்க வாரம் துவங்கியுள்ளது என்றும் கூறினர். கோழி வளர்ப்புத் திட்ட அதிகாரி திரு எல். பி. ராமசாமி, கோழிவளர்ப்பை உபதொழிலாகக் கொள்வதன் மூலம் அதிக லாபம் அடையலாம் என்றும், தினசரி உணவில் நாம் புரதச் சத்து நிறைந்த பால், முட்டை, கோழி இறைச்சி, மீன், முதலியவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தையும் எடுத்துரைத்தார். பெண்கள் கிறிஸ்துவக் கல்லூரி மனையியல் பேராசிரியர் குமாரி ஃபிளாரன்ஸ் தியாஃபிலஸ், நம் உணவில் சத்துநிறைந்த கீரைவகைகளை அதிக அளவில் சேர்த்துக்கொள்வதன் அவசியத்தை வற்புறுத்தி அவற்றை மிகவும் எளிய முறையில் நம் வீட்டுத் தோட்டங்களிலேயே பயிரிடலாம் என்றும் கூறினர். பசிப்பிணி ஒழிப்பதின் அவசியத்தையும், மேலும் அமைச்சர்கள், விவசாய இலாகா, மற்றும் சில தனியார் ஸ்தாபனங்களும் தங்களால் இயன்ற முயற்சி எடுப்பினும் பசிப்பிணியை ஒழிப்பது தனிப்பட்ட ஒவ்வொருவரின் முழுப்பொறுப்பேயாகும் என்று மேரி ராணி கல்லூரி முதல்வர் குறிப்பிட்டார்.

அமைச்சர் தம் முடிவுரையில் விவசாய, கால்நடை இலாகா நெறியாளர்களை, இவ் விழாவினை சிறப்புற நடத்தியதற்கு பாராட்டி, சட்டசபை அங்கத்தினர்களுக்கும், மற்றவர்களுக்கும் தமது மனமார்ந்த வந்தனத்தை தெரிவித்தார். விவசாயச் செய்தி அலுவலர் திரு எம். ஜே. டேவிட் நன்றி தெரிவித்தார். தேசீயக் கீதத்துடன் விழா இனிது முடிந்தது.

அதே நாளில் மாநிலம் முழுவதும் இவ் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ் விழாவினையொட்டி இரு புத்தகங்கள் வெளியிடப்பட்டு மாநிலம் பூராவிலும் விநியோகிக்கப்பட்டன.

உலகப் பசிப் பிணியை அகற்ற

உணவு உற்பத்தியை பெருக்கிடு

பஞ்சாயத்துக்களில் விவசாய உற்பத்தி திட்டங்கள்

(வி. கார்த்திகேயன், ஐ. ஏ. எஸ்., வேளாண்மைத் துறை நெறியாளர்.)

பஞ்சாயத்து விவசாய உற்பத்தி திட்டங்களைப் பற்றி இப்பொழுது பேசுவது மிகவும் பொருந்தும். இந்திய—சீனத் தகராறு காரணமாக தற்பொழுது ஏற்பட்டுள்ள தேசீய நெருக்கடி நிலை தெரிந்ததே. இந்த நெருக்கடி நிலையை செவ்வனே சமாளிப்பதற்கு விவசாய உற்பத்தியை பல மடங்கு பெருக்க வேண்டும். ஏற்கனவே வகுத்து செயலாற்றி வரும் மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட விவசாய உற்பத்திப் பெருக்கத்தைவிட இன்னும் அதிகமாக உற்பத்தியைப் பெருக்க வேண்டும். விவசாய உற்பத்திப் பெருக்கத்தில் பஞ்சாயத்துகளின் கடமையும், பொறுப்பும் திட்டவட்டமாயுள்ளன. 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் சட்டப்படி, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் அமைக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன்களிடமும் விவசாயம், கால்நடை, கிராமத் தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தும் படிப்படியாக 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதியிலிருந்து ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டு கிராமங்களையெல்லாம் 12,552 பஞ்சாயத்துகளாகப் பிரித்து 373 யூனியன்களாகத் தொகுத்துள்ளார்கள். அநேகமாக எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் கிராம உற்பத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்பட்டும் வருகின்றன. கிராம உற்பத்தித் திட்டத்தில் 2 முக்கிய அம்சங்கள் உள்ளன. ஒன்று, உள்ளூரில் கிடைக்கும் எரு வசதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டம். மற்றது, சிறந்த வித்து அபிவிருத்தி செய்து பரப்பும் திட்டம். நம் மாநிலத்தில் தொழு எரு பற்றுக்குறை இருக்கிறது. பயிர்களுக்கு சாதாரணமாக தேவைப்படும் அளவில் தற்பொழுது மூன்றில் ஒரு பங்கு எருவே கிடைக்கிறது. தொழு எரு பற்றுக்குறையைப் போக்குவதற்கு கம்போஸ்ட் எரு தயாரிப்பது எளிது. கம்போஸ்ட் எரு தயாரிப்பதற்கு கிராமங்களில் கிடைக்கும் கழிவுப் பொருள்களை உபயோகிக்கலாம். வசதியுள்ள இடங்களில் பசுந்தாள் பயிர்களையும் வளர்த்து எருவாக பயன்படுத்தவேண்டும். தரிசு நிலங்களிலும், புறம்போக்குகளிலும் பசுந்தழை கொடுக்கக் கூடிய மரங்களை வளர்க்க வேண்டும். இவை தவிர குளத்து வண்டல் மண்ணையும், ஆங்காங்கே கிடைக்கக் கூடிய இதர எருக்களையும் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும். மூன்று ஆண்டுகளில், பாசன பயிர்களுக்கு ஏக்கருக்கு 12 வண்டி வீதமும், மானவாரி பயிர்களுக்கு ஏக்கருக்கு 6 வண்டி வீதமும், பாசன பணப்பயிர்களுக்கு ஏக்கருக்கு 24 வண்டி வீதமும் எரு கிடைக்கும் அளவுக்கு நாட்டு எருக்களை அபிவிருத்தி செய்வது அவசியமாகும்.

கிராம உற்பத்தி திட்டத்தின் மற்றொரு அம்சம், கிராம சகாயக் திட்டமாகும். நெல் சிறு தானியங்களின் உயர்தர வித்துக்களை அபிவிருத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க வகுத்துள்ள திட்டமே கிராம சகாயக் திட்டம். விவசாய இலாக்காவிலிருந்து நெல் சிறுதானியங்களில் சிறந்த ரகங்கள் வெளிவந்துள்ளன. இவை நாட்டு ரகங்களைவிட 10 முதல் 15 சதம் வரை அதிக மாசூல் கொடுக்கக் கூடியவை. இலாகாவின் சிறந்த ரக வித்துக்கள் சிறு அளவிலேயே கிடைக்கும். சிறு அளவில் கிடைகும் உயர்தர வித்துக்கள் ஒவ்வொரு பஞ்சாயத்து கிராமத்திலும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இதற்கென, ஒவ்வொரு கிராமத்திலும் சில விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் "கிராம சகாயக்குகள்" எனப்படுவர். அபிவிருத்தி செய்த உயர்தர வித்துக்களை கிராம சகாயக்குகள் தங்கள் கிராம விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு வழங்கப் படும் வித்துக்கள் ஆண்டுதோறும் அந்தந்த கிராமத்தில் 3-ல் 1 பங்கு விளைநிலத்திற்குப் போதுமானதாக இருக்க வேண்டும். மூன்றுண்டு காலத்திற்குள் விளைநிலப் பரப்பு முழுவதற்கும் சிறந்த வித்துக்கள் பரவி விட வேண்டும் என்பது திட்டம். 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை வீரியமும், மகசூலும் குறையாதிருக்கும் பொருட்டு வித்துக்களை புதுபித்துக்கொள்ள வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு, திருந்திய சாகுபடி முறைகளுக்கான செயல் விளக்கங்கள், விவசாய கருவிகள் வழங்குதல் பஞ்சாயத்துகளின் நிலைமைக்கேற்ற இதர திருந்திய விவசாய முறைகள் முதலியவற்றிற்கான திட்டங்களும், கிராம உற்பத்தித் திட்டங்களுள் அடங்கியுள்ளன. திருந்திய சாகுபடி முறைகளை நன்கு திட்டமிட்டுச் செயலாக்குவதன் மூலம் மூன்று ஆண்டுகளுக்குள் விவசாய உற்பத்தியை பத்திலிருந்து பதினைந்து சதம் வரை அதிகரிக்க இயலும்.

விவசாய உற்பத்தி திட்டங்களை ஏற்று நடத்தும் பொருட்டு பஞ்சாயத்துக்களுக்கு அரசாங்கம் போதிய பணவசதி அளிக்கிறது. பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றுக்கும் 5 ஆண்டு காலத்திற்கு 2 லட்சம் ரூபாய் வீதம் விவசாய மான்யம் அளிக்கப்படுகிறது. அத்தொகையில் 1 லட்சம் ரூபாய் ஈட்டு மானியமாகப் பொதுநலக் காரியங்களுக்குச் செலவிடும் பொருட்டு வழங்கப்படுகிறது. விறகு, பசுந்தழை, தீவனம், பழம் முதலியவை கொடுக்க கூடிய மரத்தோப்புக்களை உண்டாக்குதல், கிராமக் கழிவுப் பொருள்களை உபயோகித்து கம்போஸ்ட் எரு அபிவிருத்தி செய்தல், வித்துக்காகவும் உரத்திற்காகவும் பசுந்தாள் செடிகளைப் பயிரிடுதல், பயிர்ப்பாதுகாப்பு செயல் விளக்கச் சாதனங்கள் வாங்குதல் முதலியவை பொதுநலக் காரியங்களாகும். பொது நலக் காரியங்களுக்காக அரசாங்கம் செலவிடும் ஒரு லட்ச ரூபாய்க்கு ஈடாக பயனடையும் பஞ்சாயத்துக்கள் ரூ. 50,000 வசூலித்துச் செலவிட வேண்டும். அவசியம் ஏற்பட்டால் இத்தொகையை சாகுபடி நிலங்களின் மேல் வரியாக விதித்து வசூலித்துக் கொள்ளலாம்.

விவசாய மான்யத்தில் மீதியுள்ள மற்றொரு லட்சம் ரூபாய் கிராம சகாயக் திட்டத்திற்கும், நவீன விவசாயக் கருவிகள், பயிர்ப்பாதுகாப்பு சாதனங்கள், காய்கறி வித்துக்கள், பசுந்தாள் உரவிதைகள், பழச்செடிகள் பயிர்ப்பாதுகாப்பு சாதனங்கள் ஆகியவை பாதி விலையில் கொடுக்கப்படுகின்றன. பூச்சி மருந்துகள் முக்கால் விலையிலும், பசுந்தாள் பயிர் விதைகள் 15 சத சலுகை விலையினும் கொடுக்கப்படுகின்றன. கம்போஸ்ட் குழி தோண்டி உரம் தயாரிப்பதற்கு குழி ஒன்றுக்கு 6 ரூபாய் வீதம் மான்யம் அளிக்கப்படுகிறது. மான்யத் தொகை முழுவதும் பஞ்சாயத்துக்களின் மூலம் வருகிற நபர்களுக்கு மட்டுமேவழங்கப்படுகிறது. யூனியன் தலைமைக்காரியாலயங் களிலும், கிராம சேவக் இருக்கும் இடங்களிலும் வைத்து உபயோகிக்கும் செயல் விளக்க சாதனங்கள் வாங்கு வதற்கும் மான்யத் தொகை உபயோகிக்கப்படுகிறது. ஆராய்ச்சி மூலம் அவ்வப்பொழுது கண்டு பிடிக்கப்படும் விஞ்ஞான விவசாய முறைகளை விவசாயிகளுக்குப் போதிக்கும் பொருட்டு, செயல் விளக்கப் பண்ணைகளையும் மாதிரிப் பண்ணைகளையும் அமைப்பதற்கும் மான்யத் தொகை செலவிடப்படுகிறது.

தனித்தனியே 3 தொகுப்புக்களிலும் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள் 1960–61-ம் ஆண்டிலிருந்து பணி யாற்றத் துவங்கியுள்ளன. பெரும்பாலான பஞ்சாயத்துக் களில் கிராம உற்பத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு திட்டங்களுக்கான விவசாயத் தொகைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1961–62-ம் வருட காலத்தில் புறம் போக்கு நிலங்களில் பொது நலத்திற்காக பஞ்சாயத்து தோப்புக்கள் அமைப்பதில் சிறந்த முன்னேற்றம் காணப் படுகிறது. 340 யூனியன்களில் 4,66,264 ரூபாய் செலவில் 3811 ஏக்கர்களில் பஞ்சாயத்து தோப்புக்கள் போடப் பட்டுள்ளன. 6,750 கம்போஸ்ட் உரக்குழிகள் தோண்டப் பட்டுள்ளன. 122 டன் பசுந்தாள் பயிர் விதை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 5,720 ஸ்ப்ரேயர்கள், 708 டஸ்டர்கள் 2,412 நவீன விவசாயக் கருவிகள் முதலியவற்றை பஞ்சாயத்துக்கள் வாங்கியுள்ளன. ஈட்டு மான்யத் தொகையின் கீழ் 12·38 லட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. பஞ்சாயத்து யூனியன்கள் பல தொகுப்புகளாக வெவ்வேறு காலங்களில் அமைக்கப்பட்டமையால் கிராம சகாயக் திட்டம் ஓரளவு செயலாக்கப்பட்டது. காய்கறி விதைகள் பழச்செடிகள், பசுந்தாள் பயிர் விதைகள், ஸ்ப்ரேயர்கள், டஸ்டர்கள், விவசாயக் கருவிகள், பூச்சி மருந்துகள் முதலியவற்றை வாங்கி விவசாயிகளுக்கு வழங்குவதற்கும் கம்போஸ்ட் குழிகள் வெட்டுவதற்குமாக வழங்கிய சலுகைத் தொகை 9,47,684 ரூபாய். செயல் விளக்க சாதனங்கள் வாங்குவதற்கும், செயல் விளக்கப் பண்ணை களும், மாதிரிப் பண்ணைகளும் நிறுவுவதற்குமாக செலவாகிய மான்யத் தொகை ரூ. 7,48,973. 340 யூனியன்களுக்கும் சேர்த்து செலவாகிய மொத்த மான்யத் தொகை ரூ. 28 லட்சம்.

பஞ்சாயத்து யூனியன்கள் 3 தொகுப்பாக அமைக்கப் பட்டதையும், மான்யத் தொகை வருஷ நடுவிலேயே கொடுக்கப்பட்டதையும், கிராம உற்பத்தித் திட்டத்தையும் விவசாய மான்ய ஒதுக்கீட்டுத் திட்டத்தையும், வகுப்பதற்குத் தகுந்த அநுபவம் அடைய வேண்டி இருந்ததையும் எண்ணிப் பார்க்கும்பொழுது, இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் திருப்திகரமானதே. மண்வளப் பாதுகாப்பு திட்டம் ஒன்று, பஞ்சாயத்துக்களில் சரிவர நடைபெறுமா என்பதைப் பரிசோதித்து அறியும் பொருட்டு, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள ஏழு பஞ்சாயத்து யூனியன்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அங்கங்கே கிடைக்கும் ஆள், பொருள் வசதிகளைக் கொண்டு பஞ்சாயத்துக்களே திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். மண்வளப் பாதுகாப்பு முறைகளின் நுணுக்கங்கள் அவ்வப்போது விவசாய இலாகாவால் அளிக்கப்படும். இதுவரை இத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற வேலை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. ஆயினும், இனிவரும் கோடைகாலத்தில் பயிர் அறுவடைக்குப் பிறகு, பஞ்சாயத்துக்கள் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தை அதிக ஈடுபாடு கொண்டு ஊக்கத்துடன் செயலாற்றும் என்று நம்பலாம். 1962–63 வருட காலத்தில் மொத்த மான்யத் தொகையில் 5-ல் 1 பாகத்தைச் செலவு செய்ய பஞ்சாயத்து யூனியன்கள் திட்டமிட்டுள்ளன. ஒப்படைக்கப்பட்ட விவசாய திட்டங்களை செயலாற்றுவதில் பஞ்சாயத்துக்கள் ஊக்கமும், உற்சாகமும் கொண்டுள்ளன. அதனால் அரசாங்கம் எதிர்ப்பார்க்கும் அளவுக்குப் பஞ்சாயத்துக்கள் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றும் என்பதில் ஐயமில்லை.

கிராம சகாயக் திட்டம் ஒரு முக்கியமான திட்டம். 1962–63 வருட காலத்தில் கிராம சகாயக் திட்டம் எல்லா யூனியன்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 1963-ம் ஆண்டு தை மாதத்தில் கிராம சகாயக்குகள் அபிவிருத்தி செய்த உயர்தர நெல் வித்துக்கள் எங்கும் கிடைக்கும். "கிராம சகாயக் வித்துக்கள்" அடுத்து வரும் பருவ காலத்தில் நெல் சாகுபடியாகும் வீஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு பாக விளைநிலத்துக்குப் போதுமானதாகும். சில 'கிராம சகாயக்குகள்' தங்களிடம் வித்துக்கள் இருப்பு வைப்பதற்கு போதிய இடவசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். இன்னும் சிலர், தங்களுக்கு உடனடியாகப் பணம் தேவைப் படுவதால் வித்துக்களை நீண்ட காலம் இருப்பு வைக்க இயலாது என்கின்றனர். கையில் பணம் இல்லாமையால் விவசாயிகள் 'கிராம சகாயக் வித்துக்களை' உடனடியாக வாங்க முடியாத நிலையில் இருக்கின்றனர். இந்த இக் கட்டான நிலையை மாற்றுவதற்கு அரசாங்கம் புதிய உத்திரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. அதன்படி 'கிராம சகாயக் வித்துக்களை' வாங்க விரும்பும் விவசாயிகள் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் மூலமாக தங்களுக்குத் தேவையான பணவசதியைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்களுக்கும் விவசாயி களுக்கும் இதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லப்

படுகிறது. பஞ்சாயத்திலுள்ள விஸ்தரிப்பு அலுவலர்கள், 'கிராம சகாயக் வித்துக்களை' வழங்குவதைப் பற்றியும் வித்துக்களை வாங்கும் விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு விதை தேவை என்பதைப் பற்றியும் ஒவ்வொருவருக்கு எவ்வளவு பணம் உதவி செய்யவேண்டும் என்பதைப் பற்றியும், ஆலோசித்து முடிவு எடுப்பார்கள். பணவசதி செய்து கொடுப்பதால் 'கிராம சகாயக் வித்துக்களை' வாங்குவது எளிது. அந்தந்த ஊரிலுள்ள கூட்டுறவு நாணயச் சங்கங்கள் கிராம சகாயக்குகளுக்கு தங்களுக்குச் சேர வேண்டிய தொகையை அளிக்கும். கிராம சகாயக் திட்டம் வெற்றிகரமாக முடிவது பஞ்சாயத்துக்களின் திறமையை பொருத்தது.

விவசாயத் திட்டங்களை நிறைவேற்றுவதுடன், தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைச் சமாளிக்கும் பொருட்டு, காய்கறிப் பயிர்களையும், உளுந்து பயறு போன்ற பயறு வகைகளையும் ஆங்காங்குள்ள பாசன வசதிகளைப் பயன்படுத்தி குறுகிய காலப்பயிர்களையும் சாகுபடி செய்ய வேண்டும். தேசீய நெருக்கடி நிலைமையில் அரசாங்கம் வகுக்கும் சகல விவசாய அபிவிருத்தித் திட்டங்களையும் செயலாக்குவதில் பஞ்சாயத்துக்கள் ஊக்க, உற்சாகத்துடன் ஈடுபட வேண்டும். விவசாயிகள் அனைவருடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெற்று யுத்தத்தில் வெற்றி காண பஞ்சாயத்துக்கள் உதவி செய்யுமாறு கோருகிறேன்.

ஜெய்ஹிந்த்.

(22—1—63 அன்று திருச்சி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்பட்டது.

கருங்கண்ணிப் பருத்தி சாகுபடியில் அதிக மகசூலைப் பெறும் வழி.

கே. 6 (பாண்டியன்) கருங்கண்ணிப் பருத்தியை சாலுக்குச் சால் 18 அங்குலமும் செடிக்குச் செடி 6 அங்குலமும் இடைவெளியிட்டு குழிக்கு இரண்டு செடி விட்டு வைத்து நெருக்கமாக சாகுபடி செய்ததில் ஹெக்டருக்கு 78 கிலோ கிராம் அதிக பருத்தி கிடைத்தது. அதாவது ஒரு ஹெக்டருக்கு ரூ. 109 அதிக லாபம் கிடைக்கும். கோவில்பட்டி ஆராய்ச்சி நிலையத்தின் பரிசோதனை முடிவு இதனை நிரூபித்துள்ளது.

கே. 6 (பாண்டியன்) செடிகள் உயரமாக வளர்கின்றன. மூன்று அல்லது நான்கு கிளைகளுடன் கூடியதாகவும், இலைகளின் பிரிவுகள் கைவிரல் போன்று ஆழமாக உள்ள இடைவெளிகளையுடையதாகவும் உள்ளதால், வெயிற் காலங்களில் அதிக நிழல் பரப்புவதில்லை. காற்றோட்டத்திற்கும் தடையாக இருப்பதில்லை. இதனால் நெருக்கமாக சாகுபடி செய்வதில் யாதொரு இடையூறுமில்லாது ஹெக்டருக்கு பயிர்களின் எண்ணிக்கை அதிகமாகி, அதிக மகசூலை தருகிறது.

விவசாயிகளே! நீங்களும் குழி ஒன்றுக்கு இரு செடிகள் வீதம் வைத்து கே. 6. (பாண்டியன்) பருத்தியைப் பயிரிட்டு விளைச்சலை அதிகரித்து அதிக லாபம் அடையுங்கள்

தமிழ்நாட்டில் அமெரிக்க விவசாயிகள்.

(விவசாயச் செய்தி நிலையம். சென்னை.)

அமெரிக்காவின் மூன்று முக்கிய ''விவசாயப் பண்ணை ஸ்தாபனங்களாகிய அமெரிக்க பண்ணை செயலக கூட்டகம் (American Farm Bureau Federation), விவசாயிகள் ஐக்கிய சங்கம் (Farmer's Union), தேசீயக் களஞ்சியம் (National Grange) களின் பிரதிநிதிகளாக பத்து அமெரிக்க பண்ணைத் தலைவர்கள் தமிழ்நாட்டில் 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் தேதி முதல் 8-ந் தேதி வரை சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். இதில் ஆறு விவசாயப் பெண்மணிகளும் அடங்கியிருந்தனர். அவர்கள் ஏற்கெனவே இந்தியாவின் மற்ற மாகாணங்களில் சுற்றுப் பிரயாணம் செய்திருந்தார்கள். இப் பண்ணைத் தலைவர்கள் அமெரிக்காவிலுள்ள பிலெடல்ஃப்பிய விவசாயிகளும் உலக விவகார சங்கமும் (Farmers and World affairs) இந்திய விவசாயிகள் மன்றத்தினிடையேயுள்ள விவசாயிகள் சுற்றுப் பிரயாண பரிவர்த்தனை (Exchange Programme) திட்டத்தின்கீழ் இந்தியாவுக்கு வந்திருந்தனர். இந்திய விவசாயிகளின் நிலையை அறிந்து, அவர்கள் விவசாயச் சாதனைகளையும் முன்னேற்றங்களையும் கண்டு, கருத்துக்கள் பரிமாறிக் கொள்வதுமே அவர்கள் சுற்றுப் பிரயாணத்தின் நோக்கம்.

செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில் திரு. ஆர். சீனிவாசன், செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் மன்றம், அவர்கள் இல்லத்தில் திரு. டால்ஸ்மேன், திருமதி டால்ஸ்மேன், திருமதி ஹார்ட்மேன், திருமதி பிராங்க்லாசி அவர்கள் விருந்தினர்களாகவும், ஒரக்காடு திரு. ஸ்ரீராமுலு அவர்கள் இல்லத்தில் திரு. பர்டாம், திருமதி பர்டாம், திரு. ஃபுல்லர், திருமதி. ஃபுல்லர் அவர்கள் விருந்தினராகவும், வளவனூர் திரு. எம். ஆர். லக்ஷ்மி நாராயணன் திரு. சி. கே. என். எஸ். நாகராஜன் அவர்கள் விருந்தினராக திரு. கிரைன்னர், திருமதி கிரைன்னர் அவர்களும் தங்கியிருந்தனர்.

அவர்கள் இங்கு தங்கியிருந்தபோது சாகுபடி முறைகளையும், சமுதாய நலத்திட்ட வட்டாரங்களில் பஞ்சாயத்து வேலைகளையும் பார்த்தும், விவசாயிகளின் கூட்டங்களிலும் பஞ்சாயத்து கூட்டங்களிலும் கலந்துகொண்டனர். மேலும் சரித்திர, விவசாய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் சுற்றிப் பார்த்தனர்.

தமிழ்நாட்டில் ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளையும் தீவிர சாகுபடி திட்டத்தின் முன்னேற்றத்தையும் இந்திய விவசாயிகளின் கூட்டுறவுச் சாதனைகளையும் பெரிதாகப் பாராட்டினர்.

தமிழ் நாட்டில் பருத்திப் பெருக்கத் திட்டத்தின் பத்து ஆண்டுச் சாதனைகள்

(எஸ். கமலநாதன், பி. என். இருஷ்ணசாமி.)

1950-ம் ஆண்டில் பருத்திப் பெருக்கத் திட்டம்,

1. வெளிநாடுகளிலிருந்து பருத்தி இறக்குமதி செய்வதைக் குறைக்கவும்,
2. உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும்,
3. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு பருத்தி உற்பத்தியை பெருக்கவும், ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த பத்து ஆண்டுகளில் பஞ்சு உற்பத்தி 1·92 லட்சம் பேல், அதாவது 85 சதவிகிதம் உயர்ந்துள்ளது. இத் திட்டத்தின் வெற்றிக்கு இதுவே சான்று. இதில், முதலாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் சென்னை மாநிலத்தில் 50 சதவிகித அதிக நிலப்பரப்பில் பருத்தி பயிரிடப்பட்டது; பஞ்சின் உற்பத்தி 37 சதவிகிதம் அதிகரித்தது. இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் பருத்தியின் பரப்பளவு கணிசமான முறையில் அதிகரிக்கவில்லை. எனினும், முதலாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தைத் காட்டிலும் இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் பஞ்சின் உற்பத்தி 35 சதவிகிதம் அதிகமாயிற்று. இதற்குக் காரணம் ஒரு ஏகராவின் சராசரி பஞ்சின் மகசூல் 110 இராத்தல்களிலிருந்து 144 இராத்தல்களாக அதிகரித்தது தான்.

சாதனைக்கு காரணங்கள்.—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் 85 சதவிகிதம் அதிகப் பஞ்சு உற்பத்தி செய்ய முடிந்ததிற்கான காரணங்களை இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம், அவை :—

1. அதிக பரப்பளவில் பருத்தி பயிரிடப்படுவது.—
   - (அ) தரிசாகக் கிடக்கும் நிலங்கள் சீர்திருத்தப்பட்டு பயிரிடப்படுவது ;
   - (ஆ) குறைந்த வருமானம் தரும் பயிருக்குப் பதிலாகப் பருத்தியைப் பயிரிட்டுப் பயன் அடைவது ;
   - (இ) நஞ்சைத் தரிசில் பருத்தி பயிரிடப்படுவது ;
   - (ஈ) நிலக்கடலை, எள், ராகி, மிளகாய் போன்ற இதர பயிர்களுடன் பருத்தி ஊடுபயிராகச் சாகுபடி செய்யப்படுவது.
2. ஏகராவின் பஞ்சின் மகசூல் அதிகரிக்கப்படுவது.—
   - (அ) பொறுக்கு வித்து விதைக்கப்படுவது ;
   - (ஆ) தகுந்த எரு இடப்படுவது ;
   - (இ) பூச்சி புழுக்கள், நோய்களிலிருந்து பயிர் பாதுகாக்கப்படுவது ;
   - (ஈ) நவீன சாகுபடி முறைகள் கையாளப்படுவது ;
   - (உ) பருத்திப் பயிருக்கு நீர்ப்பாய்ச்சப்படுவது ;
   - (ஊ) புன்செய் நிலங்களுக்கு மண்வளம் பாதுகாக்க வரப்பு அமைக்கப்படுவது.

திட்டத்தின் உதவி

(1) **பொறுக்குவித்து விநியோகம்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்ந்த ரக பருத்தியின் பொறுக்கு வித்துக்கள் சீல் வைத்த கோணிப்பைகளில் விவசாய இலாகாவினாலும், இலாகாவின் அனுமதி பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் நியாய விலைக்கு விற்கப்படுகின்றன.

(2) **உர விநியோகம்.**—அம்மோனியம் சல்பேட்டு, யூரியா போன்ற இரசாயன உரங்கள் பருத்திப் பயிருக்கெனத் தனியாக வழங்கப்படுகின்றன. இவற்றை விலை கொடுத்தோ அல்லது குறுகிய காலக் கடனிலோ பெறலாம். ஆண்டுதோறும் சுமார் 12 லட்சம் ரூபாய் இவ் வகையில் கடனாக அனுமதிக்கப்படுகிறது.

(3) **பயிர்ப் பாதுகாப்பு.**—பருத்திப் பயிருக்கென பூச்சி பூசண மருந்துகள் அரை விலையில் எல்லா விவசாய கிடங்குகளிலும் விற்கப்படுகின்றன. இதற்காக இந்த ஆண்டில் மட்டும் 6,34,000 ரூபாய் பெருமானமுள்ள இம் மருந்துகளை பருத்தி பயிரிடுவோருக்குக் கொடுக்க அரசாங்கம் அனுமதித்துள்ளது.

(4) பருத்தி சாகுபடி அபிவிருத்தி முறைகளைக் கையாளுவது பற்றிய ஆலோசனைகளும் அவ்வப்பொழுது இலாகாவின் மூலம் அளிக்கப்படுகின்றன.

இதர அலுவல்கள்—

(அ) கோவை மாவட்டத்தில் அவனுசி, கோபி தாலுக்காக்களில் 30,000 ஏக்கர் பரப்பளவில் புரட்டாசிப் பட்டத்துக் கம்போடியாப் பயிருக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன் கோயில் தாலுக்காவிலும் ஆக 30,000 ஏக்கர் பரப்பளவில் மாசிப்பட்ட கம்போடியாப் பயிருக்கும் எல்லா வசதிகளையும் ஒருங்கே அளித்து பருத்தி உற்பத்தியைப் பெருக்க ஒரு தீவிரத் திட்டம் (Package programme) அமுலில் இருக்கிறது. இத் திட்டத்தை மூன்றாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின் முடிவுக்குள் 1,20,000 ஏக்கரில் அமுல் நடத்த ஆலோசனையில் உள்ளது.

(ஆ) செங்கற்பட்டு, வடஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் நஞ்சைத் தரிசில் குறுகிய கால பருத்தியைச் சாகுபடி செய்வதற்கான வழிகள் ஆராயப்பட்டு வருகின்றன.

(இ) கீழ்பவானி ஆயக்கட்டில் பருத்தி பயிரிடப்படும் பரப்பளவை அதிகரிப்பதற்கான முறைகள் ஆலோசனையில் இருக்கின்றன.

(12-ம் பக்கம் பார்க்கவும்)

உங்கள் நில வளம் பெருகவும்
பயிர்கள் செழிக்கவும் உதவுகிறது

கோத்தாரியின் ஸுப்பர்பாஸ்பேட்

பயிர்களின் நல் வளர்ச்சிக்கு பாஸ்பேட் சத்து மிகவும் தேவை. கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸுப்பர்பாஸ்பேட்டில் இந்த தாவர உணவு நிரம்பியுள்ளது. அது வேர்களுக்கு பலத்தை அளித்து, பயிர்களின் வளர்ச்சியை துரிதப்படுத்தி, மகசூலைப் பெருக்குகிறது. ஒரு ஏகரா நிலத்திற்கு 100 கிலோ உரம் போதுமானது. நவீன சாகுபடி முறையில் அதிக லாபம் அடைவதற்கு இது சிறந்த வழி.

கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸுப்பர்பாஸ்பேட், சிதறிக் கொட்டாதபடி, பலமான மிஷின் தையல் போட்ட மூட்டைகளில் கிடைக்கிறது.

கோத்தாரியின் குதிரை பிராண்ட் ஸுப்பர்பாஸ்பேட் மற்றும் கலப்பு உரங்கள் உபயோகித்து உங்கள் நில வளத்தைப் பன்மடங்குபெருக்குங்கள்.

KS
KOTHARI & SONS

தயாரிப்பாளர்கள் :
ப்ளூ மவுண்டன் எஸ்டேட்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
ஓரியண்டல் பில்டிங்ஸ், அரமணைக்காரத் தெரு, மதருஸ்-1.

JWT/KS/BM/19

நெற்பயிருக்கு மணிலாகொட்டை புண்ணாக்கு

(ஆர். வெங்கடராமன், கண்காணிப்பாளர், விவசாய ஆராய்ச்சி நிலையம், பாலூர்.)

நிலத்திற்கு தழைச் சத்து கொடுப்பதற்காக ஆண்டு தோறும் அமோனியம் சல்பேட் போன்ற உரங்களை உபயோகிக்கிறோம். இதைப் பசுந்தாளுரத்துடன் கலந்து இட வேண்டும் என்பதும் அறிவோம். ஏனென்றால் வயலின் வளத்திற்கு தாவரச் சத்தும் (Humus) தேவை. தற்சமயம் அமோனியம் சல்பேட் நமக்குத் தேவையான அளவு கிடைப்பதில்லை. ஆகவே, நாம் தழைச் சத்து கொடுக்கும் மணிலா புண்ணாக்கையும் உபயோகப் படுத்தலாம்.

நிலத்திற்கு தழைச் சத்து அதிகமாக சேர்ப்பதற்காகவே நாம் வயலுக்குப் புண்ணாக்கு இடுகிறோம். நிலத்திற்காக மணிலா புண்ணாக்கை செலவழிக்கும்போது மாட்டிற்குத் தேவையான புண்ணாக்கு குறைகிறது. மாட்டிற்கு உணவாவதை நிலத்திற்கு உரமிடுவது சரியல்ல. தீவனத்திற்கு ஒதுக்கப்படாத எண்ணெயில்லா புண்ணாக்கு உரமிட தகுதியுடையது.

நிலத்திற்குத் தேவையான தழைச் சத்தை அளிக்க எண்ணெயில்லா புண்ணாக்கை (De-oiled Groundnut Cake) உபயோகப்படுத்தினால் நல்லது. இதிலிருக்கும் தழைச் சத்து பயிர்களுக்கு விரைவில் கிட்டும் நிலையி லிருக்கிறது. மேலும் இதனுடைய விலை குறைவு. "எக்ஸ்பெல்லர்" புண்ணாக்கைவிட இந்த ரகப் புண்ணாக்கில் தழைச் சத்து சிறிதளவு அதிகமாக இருக்கிறது. இதில் எண்ணெய்ப் பசை அதிகமில்லாததால் மாடுகளுக்கு இது உயர்ந்த தீவனமாகாது. இதிலிருக்கும் தழைச் சத்தினால் நெற்பயிர் அடையும் வளத்தைப் பற்றி அறிய பாலூர் விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் ஒரு சோதனை செய்யப் பட்டது.

இந்த சோதனை 1961-ம் ஆண்டு நவரைப் பட்டத்தில் டி. கே. எம். 6 (சன்ன சொர்னவாரி) நெல்லில் நடத்தப் பட்டது. நடவேண்டிய நிலத்திற்கு பசுந்தாளுரம் கொடுக்கப் படவில்லை. எக்கருக்கு 150 பவுண்டு விகிதத்தில் சூப்பர் பாஸ்பேட் மட்டும் தரப்பட்டது.

பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இயந்திர புண்ணாக்கில் 7·59 சத வீதமும் "எக்ஸ்பெல்லர்" புண்ணாக் கில் 7·05 சத வீதமும் தழைச் சத்து இருப்பதாக கணக்கெடுக்கப்பட்டது. 49 அடி × 4 அடி பாத்திகளில் இரு தடவை தனித்தனியே இவ்விரண்டு புண்ணாக்கும் எக்கருக்கு 700 ராத்தல் அளவில் கொடுக்கப்பட்டது.

இதனுடைய மகசூல் பின்வருமாறு.

சராசரி நெல் மகசூல். (1)	எண்ணெயில்லாப் புண்ணாக்கு (ராத்தல்). (2)	எக்ஸ்பெல்லர் புண்ணாக்கு (ராத்தல்). (3)
பாத்திகளில்	24·94	23·25
வைக்கோல்	41·00	41·50
சராசரி மகசூல் எக்கர் ஒன்றுக்கு. ..	2,733·00	3,543·00
வைக்கோல்	4,497·00	4,543·00
நெல் மகசூல் ஒரு பவுண்டு தழைச் சத்திற்கு. ..	51·54	51·53
வைக்கோல்	84·74	85·69
100 பவுண்டு புண்ணாக்கு—நெல் மகசூல். ..	390.43	349·00
வைக்கோல்	713·43	649·00
ஒரு எக்கருக்கு தழைச் சத்து கொடுக்கப்பட்டது. ..	53·13	49·35
	ரூ. ந.பை,	ரூ. ந.பை,
ஒரு பவுண்டு தழைச் சத்தின் விலை. ..	2 14	2 58
100 பவுண்டு புண்ணாக்கின் விலை. ..	16 25	18 12

100 ராத்தல் இயந்திரப் புண்ணாக்கு ரூ. 1·87 ந.பை குறைந்த விலைக்குக் கிடைப்பதுமல்லாமல் எக்கர் ஒன்றுக்கு சுமார் 7 சத விகிதம் அதிக நெல் மகசூலையும் தருகிறது. ஆகவே இயந்திர புண்ணாக்கை நிலத்திற்கு இடுவது நல்லது.

(10-ம் பக்கம்—தொடர்ச்சி)

(ஈ) தஞ்சை மாவட்டத்திலுள்ள நஞ்சைத் தரிசில் பி–216 எப். என்னும் குறுகிய காலப் பருத்தியைப் பயிரிடு வதைக் குறித்து அங்குள்ள விவசாயிகள் இன்னும் ஐயப்பாடுடையவராயுள்ளனர். 1963-ம் ஆண்டில் கோடைக் காலத்தில் இப்பருத்தியை மாதிரிப் பண்ணைகளில் பயிரிட்டுப் பார்த்து அவற்றின் சாதனைகள் ஐயமறத் தெரிந்தபின், சுமார் 25,000 எக்கரில் இப்பருத்தியைப் பயிரிடலாம் என்று ஏற்பாடாகி இருக்கிறது. இதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் பருத்திப் பயிரிடுபவர்களுக்கு அளிக்க இத்திட்டம் இடமளிக்கிறது.

(உ) உயரிய நீண்ட இழை கொண்ட "ஆண்ட்ரூஸ் சீ ஐலண்டு" என்னும் பருத்தியை தமிழ்நாட்டில் விளை விப்பதற்காகத் தீவிர முயற்சிகள் நடந்துகொண்டிருக் கின்றன. இம்முயற்சிகள் வெற்றி பெற்றால், இப்பஞ்சுக் காக வெளிநாட்டை நம்பி இருக்கும் நாம், நம் நாட்டி லேயே இதை உற்பத்தி செய்துகொள்ளலாம்.

பருத்தியைப் பயிரிடுவோரும், பயிரிட விரும்புவர்களும் மேலே கூறிய முறைகளைப் பின்பற்றியும், திட்டத்தின் உதவியைப் பெற்றும், பருத்தி உற்பத்தியைப் பெருக்கித் தாங்கள் பயன் அடைவதல்லாமல் நாட்டுக்கும் உதவலாம். மூன்றாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின் முடிவில் (1965–66-ம் ஆண்டில்) இலட்சம் பேல்கள் பஞ்சை தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யவேண்டும் என்பது குறிக்கோள்; இதற்கு விவசாயிகளின் உதவி பெரிதும் தேவை.

உங்கள் நெற்பயிருக்கு

போட்டாஷ்

K_2O

(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்

பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
உரத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.

சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.

பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும்
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.

உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த முகவரிக்கு எழுதவும்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்

8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1

IPG 2 TMa

மலைப் பிராந்தியங்களில் மண்வளப் பாதுகாப்பும் நீலகிரி ஜில்லாவில் அதன் முக்கியத்துவமும்.

(எஸ். ராமைய்யா, எல். ஸி. இ., உதவி விவசாய பொறியாளர், மண்வளப் பாதுகாப்புத் திட்டம் உதகமண்டலம்.)

இயற்கையாக ஒரு அங்குல மேல் மண் உண்டாக பல ஆயிரம் ஆண்டுகள் பிடிக்கின்றது. சராசரி 9 அங்குலத்திற்கு காணப்படும் இவ்வளவு கொண்ட மேல் மண்ணை நாடித்தான் விவசாயம் நடைபெறுகிறது.

நீலகிரியைப் போன்ற மலைப் பிரதேசங்களில், சமவெளிகளில் ஏற்படக்கூடிய மண் அரிமானத்தைவிட பன்மடங்கு அதிகம் காணப்படுகிறது.

நீலகிரியில் உருளைக் கிழங்கு நல்ல மகசூலும் ஆதாயமும் தரக்கூடிய விவசாயம். இன்றைக்கு சுமார் 21,000 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டு வருகிறது. எவ்வித கட்டுப்பாட்டுக்கும் உட்படாமல் உயர்ந்து வந்த இவ்விவசாயம், எவ்வளவு காடுகளின் அழிவுக்கும் மண் அரிமானத்திற்கும் காரணமாயிருக்கிறது என்பதை கணக்கிடவே முடியாது. வருடாவருடம் இந்நஷ்டம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்நஷ்டத்தை தடுப்பதற்கும் எஞ்சியுள்ள மண்ணைக் காப்பதற்கும் உடனடியாக தகுந்த மண் பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல் அவசியம். மண் வளமிழந்து விட்டதால் இன்று ஏராளமான செயற்கை உரங்களை ஊட்டித்தான் உருளைக் கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

இப் பிரதேசத்தில் மழை தேவைக்கும் மிஞ்சியே பெய்கிறது. இம்மழையால் உண்டாகும் வெள்ளத்தை தடுப்பதற்கும், மண் அரிமானம் ஏற்படாமல் பார்ப்பதும், அதே சமயத்தில் நிலத்திற்கு சாகுபடிக்கு போதிய அளவு நீர் அளிக்கவும் ஏற்பாடு செய்வதே முக்கியக் குறிக்கோளாகும். பொதுவாக கீழே சொல்லப்பட்ட பாதுகாப்பு முறைகள் நீலகிரி போன்ற பிரதேசங்களுக்கு உகந்தவை.

(1) வரப்பு கட்டுதல் (Bunding)—சற்றே வாட்டங் கொண்ட வரப்புகள்.

இப்பாதுகாப்பு முறை 2 சத விகிதத்தில் இருந்து 10 சத விகிதம் சரிவுடைய நிலங்களுக்கு ஏற்றவை. பள்ளத்தாக்குகளிலும், நீர்ப்போக்குகளை அண்டியும் காணப்படும் அதிகச் சரிவில்லாத பூமிகள் இவை.

ஐம்பது அடி இடைவெளிக்கு ஒன்றாக நிலத்தின் இயற்கைச் சரிவின் குறுக்கே சம உயரத்தில், ஆனால் நீளவாக்கில் சற்றே வாட்டங்கொண்ட மண் கரைகள் கட்ட வேண்டும். இவை மழைத் தண்ணீரை ஆங்காங்கே தடைசெய்து நீளவாக்கில் மெல்ல ஒழுக விடுகின்றது. இதனால் தேவையான தண்ணீர் நிலத்தில் உறிஞ்சப்படுவது மல்லாமல், தேவைக்கு மிஞ்சிய நீரை அப்புறப்படுத்தவும் ஏதுவாகிறது. சரிவின் வழியே ஒழுகிவரும் மழைத் தண்ணீரின் வேகம் அடுத்த கரையால் தடுக்கப்படுவதால் மண் அரிமானம் ஏற்படுவதில்லை.

இது போலவே அகலம் பொருந்தியதும், ஆனால் ஆழம் குறைந்ததுமான "அமெரிக்கன் சானல் டிரல்" எனப்படும் சால்களை அமைத்தும் அரிமானத்தை தடை செய்யலாம். இச் "சானல்களும்" சரிவின் குறுக்கே, சற்றே நீளவாட்டம் கொண்ட கரைகளைப் போலவேயே அமைக்கப்படுகின்றன. சால்களில் தேங்கிய தண்ணீர் மகசூலுக்கு உதவும்; எஞ்சிய தண்ணீர் நீளவாக்கில் மெள்ள ஒழுகி அப்பால் சென்றுவிடும். இவ்வாறு எஞ்சிய தண்ணீர் செங்குத்துக் கால்வாய்கள் (Vertical Drains) வழியே நீர்த்தேக்கங்களுக்கோ அல்லது மேய்ச்சல் நிலங்களுக்கோ அரிமானமாகா வண்ணம் எடுத்துச் செல்லப்படவேண்டும். வரப்புகள், சானல் டெரஸ்கள் யாவும், குறிப்பிட்ட குறுக்களவுகளுடையவை. ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் அமைக்கப்படுபவை. நிலத்தின் சரிவு, அங்கு பெய்யும் மழையின் அளவு, மண்ணின் தரம் எனப்பட்ட பல காரணங்களை வைத்தே இவைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. அவைகளை அவ்வப்பொழுது பழுது பார்க்கவும் வேண்டும். தகுந்த பயிர் மாற்றுமுறை, சரிவின் குறுக்கே 'காண்டூர்'லேயே செய்யும் விவசாய முறை, என்றுமே நிலத்தை தகுந்த தாவரப் போர்வையுடன் வைத்திருத்தல், முதலியவை மண் பாதுகாப்பிற்கு உகந்தவை. பயிர் மாற்று முறை நிலவளத்தைக் காக்கும், பூமியை தரிசாக விடாமல் மண்ணைக் காக்கும், காண்டூர் விவசாயம் போதிய ஈரத்தை நிலத்தில் நிலைநாட்டும். இவையாவும் ஒன்று சேர்ந்த சிறந்த விவசாய முறை நல்ல மகசூலைக் கொடுக்கும்.

(2) "காண்டூர் டிரெஞ்சிங்" (Contour Trenching) சற்றே வாட்டங்கொண்ட கால்வாய்கள் தோண்டுதல்.

(1) இக்கால்வாய்கள் அவைகளில் கடத்திச் செல்லவேண்டிய மழை நீரின் அளவுக்கு ஏற்றதாக வெட்டப்படவேண்டும். சிறிதாகவிருந்தால் சிறு மழையென்றாலும் இக் கால்வாய்களில் வெள்ளப் பெருக்கெடுத்து பக்கவாட்டில் வழிந்து நில அரிமானத்திற்கு ஏதுவாகிறது. (2) சரிவுக்கு நேர் குறுக்காக அமைக்க வேண்டும். சரிவின் போக்கிலேயே செங்குத்தாக வெட்டப்பட்டால் அதிகமாகப் பாயும் தண்ணீர் ஒரு நொடியில் வேகம் கொண்டு பக்கவாட்டிலும், தனது போக்கிலும் கால்வாயை அரித்துச் செல்கிறது. நாளடைவில் மிகப் பெருத்து விளைச்சல் நிலத்தின் பெரும் பாகத்தையும் தன்னுள் கொண்டு ஒரு "பேரோடை"யாக மாறிவிடும்.

(3) இவைகள் தகுந்த இடைவெளியைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும். (4) அவ்வப்பொழுது பழுது பார்க்கப்படவேண்டும்.

காண்டூர் கால்வாய்கள் 10-ல் இருந்து 16 சத வீதம் வரையுள்ள சரிவு நிலங்களுக்கே ஏற்றவை. (2) 5′-0″ செங்குத்து உயரத்தை இடை வெளியாகக் கொண்டு பூமியின் இயற்கைச் சரிவுக்கு குறுக்காக வெட்டப்படும் கால்வாய்கள் இவை. இவைகளில் சென்று சேரும் தண்ணீரை அப்புறப்படுத்த இக்கால்வாய்களுக்கு நீளவாக்கில் சற்று வாட்டம் (Grade) கொடுக்கப்பட வேண்டும். அதுவுமின்றி இக்கால்வாய்க்குள் 20 அல்லது 25′க்கு ஒன்றாக குறுக்கே துண்டுகள் விடப்பட்டுள்ளதால் இவைகளுக்கிடையே தண்ணீர் தேங்கவும், எஞ்சிய தண்ணீர் கால்வாயின் நீளவாட்டத்தை நோக்கி மெள்ள ஒழுகவும் ஏதுவாகிறது. கால்வாய்களின் குறுக்களவும், இடைவெளியும், நீளவாட்டமும் அப்பிரதேசத்தின் மழையளவு, நிலத்தின் சரிவு, மண்ணின் தன்மை, செய்யப்படும் விவசாயம் எனப்பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுபவன. சரிவின் வழியே வழிந்து வரும் மழைத் தண்ணீர் அதன் வேகத்தை அடையுமுன் இக் கால்வாய்களை அடைவதால் தனது போக்கில் மண்ணை அரிக்கமுடியாமல் போய் விடுகிறது. சற்றேதேனும் அரிமானம் ஏற்பட்டாலும் அம்மண் யாதும் கால்வாயில் படிந்து விடுவதால் பிறகு எடுத்து நிலத்திலேயே சேர்க்கப்படுகிறது. இவ்விதம் நிலத்தில் மண் நஷ்டம் இல்லாமல் இம்முறை பாதுகாக்கிறது. பயிர் மாற்று முறை அவசியம். கால்வாய் வெட்டப்பட்ட மண் சரிவின் கீழ்பாகத்தில் கால்வாயின் போக்கிலேயே ஒரு கரைபோல் அமைக்கப்பட்டு அதில் புல் வகைகள் அல்லது இதர உபயோகமான செடிகளை வைத்து பலப்படுத்தப்படுகிறது. கால்வாய்களிலும் நல்ல வகையில் படர்ந்து வளரும் புல் வகைகள் நட்டு வைத்தால் கால்வாய்களிலேயே ஒரு சமயம் ஏற்படக்கூடிய அரிமானத்தை தடுக்கலாம். தூர்க்கப்பட்ட மண் அங்கங்கே தேங்குவதால் மறுபடியும் அதனை எடுத்து நிலத்திலேயே போடவும் முடிகிறது. இக்கால்வாய்களினின்றும் வடியும் தண்ணீர் செங்குத்துக் கால்வாய்கள் வழியே அப்புறப்படுத்தப்படுகிறது. இச்செங்குத்துக் கால்வாய்களில் ஆங்காங்கே ‘ நீர்க் குழிகள்’ (Drop Pits--Silt Pits) எனப்படும் குழிகள்வெட்டப்பட்டுள்ளதால் தண்ணீர் இக்குழிகளில் விழுந்து விழுந்து வழிந்து செல்வதால் செங்குத்துப் போக்கில் தனது வேகத்தை குறைத்துச் செல்ல ஏதுவாகிறது. அதனால் செங்குத்துக் கால்வாய்களில் ஏற்படக்கூடிய அரிமானம் தடைபடுகிறது. வரப்பிட்ட நிலங்களைப்போல் இப்பூமிகளிலும் பயிர் மாற்றுமுறை, காண்டூர் விவசாயம் போன்றவற்றைச் செய்வதால் நிலம் தனது வளப்பத்தை என்றும் நிலைநாட்டி தக்க மகசூலைக் கொடுக்கும்.

(3) மட்டம் வெட்டுதல் (Bench Terrace)

இம்முறை நீலகிரி விவசாயிகளுக்கு புதிதல்ல. சிற்சில கிராமங்களை ஒட்டியுள்ள பூமிகள் அநேகமாக ஓரளவு மட்டம் செய்யப்பட்டு பல வருடங்களாகவே பயிரிடப்பட்டு வந்தவை.

16%ல் இருந்து 33-1/3% வரை சரிவு கொண்ட நிலங்களுக்கு சம உயரமட்டம் வெட்டுதல் மட்டும்தான் தகுந்த பாதுகாப்பு முறையாகும். இதனால் மண்ணின் ஆழம், மழையளவு, சரிவு என்ற காரணங்களைக்கொண்டு 4′ அல்லது 5′ செங்குத்து இடைவெளியை ஆதாரமாகக்கொண்டு அநேகமாக சம உயரத்திலேயே வெட்டப்படும் மட்டத்தில்தான் விவசாயம் செய்யவேண்டும். நீலகிரியில் அதிக மழை உள்ளதால் இம்மட்டத்தில் தண்ணீர் தேங்கி மகசூலை கெடுக்கா வண்ணம் இருக்க மட்டங்கள் யாவும் உள்வாட்டங் கொண்டு வெட்டப்படவேண்டும். அதுவுமின்றி மட்டத்திற்கு நீளவாட்டம் கொடுத்திருப்பதால் தண்ணீர் லேசாக வடிந்து செங்குத்துக் கால்வாய்களில் கலந்து அப்புறப்படுத்தப்படுகிறது. தேவையான தண்ணீர் மட்டத்தில் ஊறியும் எஞ்சிய நீர் நீளவாக்கில் வடிந்தும் செல்வதால் மகசூலுக்குத் தேவையான தண்ணீரே உபயோகப்படுத்தப்படுகிறது.

செய்த மட்டத்தையும் நல்ல முறையில் பாதுகாப்பது மிக அவசியம். மட்டத்தின் முகப்புகளில் சேர்க்கப்பட்ட “ போடு–மண ” மிக சீக்கிரம் கரையக்கூடியதால் அவைகளை நன்கு பலப்படுத்தி ஸ்திரப்படுத்த அவைகளில் மண்ணை இருகப்பிடித்துக்கொள்ளும் புல்வகைகளையோ அல்லது மற்ற பலன் தரக்கூடியதுமான செடிகளையோ வைத்து பலப்படுத்தலாம். புல்வகைகள் கால்நடைகளுக்கு தீனியாவதுடன் சிறந்த பாதுகாப்பாகவும் விளைகிறது. ‘ ஜெரேனியம் ’ போன்ற வாசனைத் திரவியங்கள் தரும் செடிகள் வைத்தால் நல்ல வருமானமும் கிடைக்கும். மட்டத்தின் வாட்டம், அதாவது உள்வாட்டம், நீளவாட்டம் என்பவை எப்பொழுதுமே பாதுகாக்கப்பட வேண்டும். இல்லையெனில் மட்டத்தின் உபயோகமே மாறுபட்டுவிடும். உழுதும், முள்ளிட்டும் (Forking) விவசாயம் செய்யும்பொழுது இவ்வாட்டம் கலையாமலேயே பாதுகாப்பது மிக அவசியம். அடுத்தபடியாக மட்டத்தின் குறுக்கே செல்லும் செங்குத்துக் கால்வாய்கள் அடைபடாமலும், நீர்க் குழிகள் அடைபடாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும். கால்வாய்கள் அரிபடாமல் இருக்க அவைகளிலும் நன்கு நிலத்தையொட்டி படர்ந்து வரும் புல்வகைகள் வளர்த்து பலப்படுத்தலாம். நீர்க்குழிகளில் கூழாங்கற்கள் போட்டு வைத்தால் மேல் மட்டத்திலிருந்து குதிக்கும் தண்ணீர் இக்குழிகளில் அரிமானம் உண்டாக்குவதைத் தடுக்கும்.

(4) சம உயரக் கால்வாய்கள் அமைத்தலும் அதனுடன் காடு வளர்த்தலும் (Trenching and Afforestation).

மலைப்பிராந்தியங்களில் எங்கு வேண்டுமாயினும் காடுகளை அழித்து விவசாயம் செய்யலாம் என்னும் மனப்பான்மை ஒழியவேண்டும்.

மிகவும் சரிவான (33⅓%க்கும் அதிக சரிவுடைய) நிலங்களில் உருளைக்கிழங்கு அல்லது வருடாவருடம் அறுவடை செய்யக்கூடிய எந்தப் பயிரையும் சாகுபடி செய்யக்கூடாது.

என்றுமே நிரந்தரமாக இருக்கக்கூடிய காடுகள் வளர்க்கலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட சரிவு வரை காப்பி, தேயிலை போன்ற நிரந்தரப் பயிர்சாகுபடியை ஏற்றுக் கொள்ளலாம். அவ்விதம் செய்யும்பொழுது இச்செடிகள் அல்லது மரங்கள் நன்கு அடர்ந்து வளர்ந்து, பூமியை மழை, காற்று இவைகளினின்றும் காக்கும்வரை அரிமானம் ஏற்படாமல் பாதுகாக்க, காண்டூர் கால்வாய்களை முன்னமே கூறியது போல் வெட்டி வைக்கவேண்டும். காப்பி, தேயிலைத் தோட்டங்களில் இக்கால்வாய்கள் என்றென்றுமே அவசியம். இதனால் தாழ்வாரங்களில் உள்ள விவசாய நிலங்களும் பலனடைகின்றன.

இப்பாதுகாப்பு முறைகளை நல்ல நிலையில் கையாளுவதைத் தவிர சிற்சில நிலங்களில் காணப்படும் "பேரோடை"களை (Gully) தூர்க்கவும் ஏற்பாடு செய்யவேண்டும். புல்வகை, இதர செடிகள் வைத்து பேரோடைகள் விரிவடைவதைத் தடுக்கலாம். பேரோடைகளுக்குக் காரணம் அவைகளின் வழியே தடையின்றி மிகுதியாகச் செல்லும் தண்ணீரேயாதலால் முதலில் அத் தண்ணீரை அபாயமின்றி அப்புறப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வுடைப்புகளின் பக்கங்களை சரிவாக வெட்டி விட்டு அங்கு புல்வகைகள் வைத்து அரிமானமாகா வண்ணம் பலப்படுத்தவேண்டும். உடைப்பின் குறுக்கே அணைகட்டியோ அல்லது உயர்ந்து வளரக்கூடிய புல்வகை வைத்தோ மண் அரிமானத்தை தடுத்து நாளடைவில் தூர்த்துவிடலாம். நெடுஞ்சாலைகளினின்றும் ஒழுகிவரும் தண்ணீர் "மொரி"கள் வழியாக வந்து சில நிலங்களில் புகுந்து உடைப்பை உண்டாக்கின்றன. இப்பேர்ப்பட்ட இடங்களில் நல்ல கற்களைக் கொண்டு ஒழுங்கான ரீதியில் கட்டிடம் கட்டி தண்ணீரை அடிவாரங்களுக்கு எடுத்துச் செல்வது அவசியம்.

விவசாயப் பெருங்குடி மக்கள் யாவரும் மண்வளப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் நன்கு உணர்ந்து தாங்களாகவே முன் வந்து இவ்வேலைகளை ஏற்றுச் செய்வது சாலச்சிறந்தது. மண்நஷ்டம் தங்களுடைய பெரும் நஷ்டம் என்பது மறுக்க முடியாதது. உடனடியாக இதை கவனிக்க வேண்டுமாதலால் ஒவ்வொரு விவசாயியும் இதை உணர்ந்து ஆவன செய்யவேண்டும். சர்க்கார் அதற்குத் தேவையான பொருள் உதவியும், இலவச ஆலோசனையும் தருகின்றது. எனவே தங்கள் தங்கள் நிலத்தின் நிரந்தரப் பாதுகாப்பிற்காகவும், குன்றாத மகசூலுக்காகவும் உடனடியாக தகுந்த பாதுகாப்புகளை கையாளுமாறு கோரப்படுகிறார்கள்.

தனியார் பழச்செடி நாற்றங்கால்கள் விவசாய இலாகா

அங்கீகாரம் பெற விண்ணப்பித்தல்

கடந்த மூன்று வருடங்களாக பழ அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கடன் பெறுவோருக்கும், பஞ்சாயத்து யூனியன்களில் பழச் செடிகளை சலுகை விலையில் வழங்க பஞ்சாயத்து கமிஷனர்களுக்கும் பழச்செடிகள் வழங்க சில தனியார் பழச்செடி நாற்றங்கால்கள் தமிழ்நாட்டு விவசாய இலாகாவின் அங்கீகாரம் பெற்றிருக்கின்றன. இதுபோன்று இவ்வருடமும் அங்கீகாரம் வழங்க தனியார் பழச்செடி நாற்றங்கால்களிடமிருந்து விண்ணப்பங்கள் தருவிக்க விவசாய இலாகா தீர்மானித்திருக்கிறது. இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் விண்ணப்பங்களை வேளாண்மைத்துறை நெறியாளர், தபால்பெட்டி எண் 412, சென்னை–5 என்ற விலாசத்திற்கு அனுப்பவும். இதன் நகல் ஒன்றை தோட்டக்கலை நிபுணருக்கும் (விவசாய கல்லூரி ஆராய்ச்சிக்கூடம், கோவை-3), மற்றொன்றை உதவித்தோட்டக்கலை நிபுணருக்கும் (பழ அபிவிருத்தி திட்டம், 46, பாஷ்யகார்லு ரோடு, கோவை-2), அனுப்பி வைக்கவும். இந்த விண்ணப்பங்களுடன் இதற்கென குறிப்பிடப்பட்டிருக்கும் அறிக்கை ஒன்றையும் அனுப்ப வேண்டும். இந்த அறிக்கைத் தாள்களை அந்தந்த மாவட்ட விவசாய அலுவலர்களிடமிருந்தோ, தோட்டக்கலை நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், கோவை, உதவித் தோட்டக்கலை நிபுணர், பழ அபிவிருத்தித் திட்டம், 46, பாஷ்யகார்லு ரோடு, கோவை-2, முதலியவர்களிடமிருந்தோ பெறலாம்.

விண்ணப்பத்தை விவசாயத்துறை நெறியாளருக்கும், அதன் நகல்கள் ஒவ்வொன்றை கோவை தோட்டக்கலை நிபுணருக்கும், உதவித் தோட்டக்கலை நிபுணருக்கும் (பழ அபிவிருத்தித் திட்டம்) 1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் 15-ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவேண்டும். 1963-ம் ஆண்டு எப்ரல் மாதம் 15–ம் தேதிக்குப்பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பூச்சி பூஞ்சண நோய் தடுப்பு மருந்துகளை உபயோகித்து பயிரைப் பாதுகாப்போம்

பேயர் அக்ரோ கெம் லிமிடெட்

பம்பாய்-4.

52/54, ரத்தன் பஜார், மதருஸ்-3.

பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள்

ஸெரஸான் ஈரக்கலவை (CERESAN WET)

தான்யங்கள், பருத்தி, கடலே மற்றும் இதர வித்துக்களே விதைக்குமுன் விதைகளின் மூலமாகவும் மண்ணின் மூலமாகவும் பரவும் பூஞ்சண நோய்களேத் தடுக்க, விதைகளுடன் கலந்து உபயோகிக்க பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டது. முளேக்கட்டி நாற்று விடும் நெல் விதைகளே இந்த ஈரக்கலவையில் நனைத்து விதைக்க நாற்றங்கால் பசுமையாகவும், செழிப்பாகவும் வளரும்.

வாழை, மிளகாய், கத்தரி வாடல் நோய் (WILT)-க்கு 0·1% கலவையை உபயோகித்தால் வாடல் நோயைத் தடுக்க முடியும். வாழை, கத்தரி, மிளகாய் பயிரிடுவோர் மிகவும் விரும்பி உபயோகிப்பது.

ஸெரஸான் வரக்கலவை (CERESAN DRY)

எல்லாவிதமான விதைகளேயும் மண்ணிலிருந்து பரவும் நோய்களேத் தடுத்து நல்லபடி முளேத்து செழுமையாக வளர வாக்கலவையாக உபயோகப்படுத்தலாம்.

அகல்லால் (AGALLOL) 3% & 6%

கரும்புக்கரணேகளே நடுமுன், மண்ணிலிருந்து பரவும் நோய்களேத் தடுத்து, நல்லபடி முளேத்து செழுமையாக வளரவும், சொட்டைகளேக் குறைக்கவும், இந்த மருந்து திரவத்தில் கரணேகளே மூழ்கி எடுத்து நட, நல்ல பயன் அளிக்கும். உருளேக்கிழங்கு நடுமுன், கிழங்குகளே இதில் தோய்த்து நட, நல்ல பலன் அளிக்கும்.

தமிழ்நாடு, கேரளா பூர்ண விநியோகஸ்தர்கள்:

ஏ. வி. தாமஸ் & கம்பெனி லிட்.
தபால் பெட்டி 47, ஆலப்புழை.

ஏ. வி. தாமஸ் & கம்பெனி (இந்தியா) லிட்.
தபால் பெட்டி 1603, மதருஸ்-1.

கோயமுத்தூர் ஜில்லா :

ஆர். சுப்ரமண்யம்,
53, பொன்னுரங்கம் ரோட்,
ஆர். எஸ். புரம், கோவை.

மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்கள் :

ஏ. பி. வி. சன்ஸ்,
13, சுவாமி சந்நிதி வீதி,
கீழ்மாசி வீதி, மதுரை.

தஞ்சை, தென் ஆற்காடு ஜில்லாக்கள் :

ராஜாராம் டிரேட்ஸ்,
பஜாஜ் மான்ஷன்,
வில்லியம்ஸ் ரோட், திருச்சி-1.

திருச்சிராப்பள்ளி ஜில்லா :

பி. எச். ஷேக் அலாவுத்தின்,
தபால் பெட்டி 462,
பாலக்கரை ரோட், திருச்சி-8.

திருநெல்வேலி ஜில்லா :

எஸ். ஆர். சுப்ரமண்ய பிள்ளே,
திருநெல்வேலி ஜங்ஷன்.

கன்யாகுமரி ஜில்லா :

தாம்ஸன் ஏஜன்ஸிஸ்,
நாகர்கோவில்.

சேலம், ஏற்காடு :

தி ஏற்காடு காபி கியூரிங் வொர்க்ஸ் லிமிடெட்
கண்ணன்குரிச்சி போஸ்ட், சேலம்.

தொழு உரமும் அதன் நன்மைகளும்

(A. நடராஜன், B.Sc., பரிசோதனை உதவியாளர், மண் பரிசோதனை நிலையம், ஆடுதுறை.)

கால் நடைகளின் கழிவுப் பொருள் பயிர்களுக்குத் தேவையான ஒரு சிறந்த உரமாகிறது. நம்மில் பலர் தொழு உரத்தை ஒரு அவசியமற்ற பொருளாகக் கருதி அதை எவ்வளவு குறைந்த செலவில் அப்புறப்படுத்த முடியுமோ, அவ்வளவு குறைந்த செலவில் அப்புறப்படுத்த வேண்டும் என்றும், அதை நிலங்களில் பரப்ப செலவிடும் நேரமும் வீண் என்றும் கருதுகின்றனர்.

பயிர்களின் உற்பத்தித் திறனை எவ்விதம் பெருக்கு வது என்பதே நமது இன்றைய முக்கிய பிரச்னையாகும். இரசாயன உரங்களை உபயோகிப்பதன் மூலம் உற்பத்தியை ஓரளவு பெருக்கலாம் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. தொழு உரம் போன்ற இயற்கை உரங்கள் இடு வதால் மண்ணின் அமைப்பு சீர்படுத்தப்படுவதுடன் இரசா யன உரச்சத்துக்கள் பயிர்களுக்கு எளிதில் கிடைக்கவும் ஏதுவாகிறது.

தொழு உரங்களில் உள்ள முக்கிய பயிர்ச்சத்து பொருள்கள்.

தொழு உரத்தில் உள்ள சத்துப் பொருள்கள் யாவும் திடப்பொருள் ரூபத்திலும் திரவப் பொருள் ரூபத்திலும் 3 : 1 என்ற விகிதத்தில் அடங்கி உள்ளது. தொழு உரத்திலிருந்து கிடைக்கக்கூடிய பாதிக்கும் மேற்பட்ட தழைச் சத்தும், எல்லா மணிச் சத்தும் (பாஸ்பாரிக் அமிலம்) திடப் பொருளிலிருந்து கிடைக்கின்றது. மிகச் சுலபமாக கிடைக்கக்கூடிய இந்த சத்துப் பொருள்கள் மிகவும் எளிதில் கரைந்து வெளியேற அதிக வாய்ப்புகள் இருப்பதால், திரவப் பொருளை வெளியேற விடுவதன் மூலம் திடப் பொருள்களிலிருந்து கிடைக்கக்கூடிய சத்துப் பொருள்களும் மிகக் குறைந்து விடுகின்றன.

நிலங்களுக்குப் போடப்படும் தொழு உரத்தில் தோரா யமாக 0·5 சத வீதம் தழைச் சத்தும், 0·25 சத வீதம் மணிச் சத்தும், 0·5 சத வீதம் சாம்பற் சத்தும் அடங்கி உள்ளன. அதாவது ஒரு டன் தொழு உரத்தில் 10 ராத் தல் தழைச் சத்தும், 5 ராத்தல் மணிச் சத்தும், 10 ராத் தல் சாம்பற் சத்தும் அடங்கி உள்ளன. இதைத் தவிர கால்சியம், மக்னீஷியம், கந்தகம் போன்ற பல மூலகங் களும், நில வளத்தைக் காக்கக் கூடிய பல நுண்ணிய மூலகங்களும் (trace elements) தொழு உரத்தில் அடங்கி உள்ளன.

தொழு உரங்களை சேகரித்து வைத்தலும், பாதுகாப்பு முறைகளும்.

தொழு உரங்களை தண்ணீர் உறிஞ்சாத தரையில் சேகரிப்பதன் மூலம் திரவப் பொருள் வீணாவதைத் தடுக்க லாம். தேவைக்கேற்ற வைக்கோலை தரையில் பரப்பு வதன் மூலம் திரவப் பொருள் சேதமாகாமல் பாதுகாக்க லாம். வைக்கோலை அதிகமாகப் பரப்பினால், அழுகிப் போகும் வைக்கோல் பயிர் வளர்ச்சியை மந்தப்படுத்து மாகையால் போதுமான அளவு வைக்கோலையே பரப்ப வேண்டும்.

தொழு உரத்தில் உள்ள தழைச் சத்து சிலநாட்களில் அமோனியா என்னும் வாயுவாக வெளிப்பட்டு விடுகின் றது. அதைத் தடுப்பதற்கு சிறிதளவு சூபர் பாஸ்பேட்டை வைக்கோலின்மீது தூவ வேண்டும். இவ்வாறு தூவப் பட்ட சூபர் பாஸ்பேட், உரத்தில் உள்ள தாவரச் சத்துக் களுடன் (organic matter) கலப்பதன் மூலம், பயிர் களுக்கு எளிதில் கிடைக்கும் தன்மையை அடைகின்றது. பொதுவாக, அமிலத் தன்மை அதிகமாக உள்ள நிலங் களில் நேரடியாக போடப்பட்ட சூபர் பாஸ்பேட், மண்ணில் உள்ள இரும்புச் சத்து, அலுமினியச் சத்து முதலிய வற்றோடு கலந்து கூட்டுப் பொருளாகி விடுகின்றது. எனவே போடப்பட்ட மணிச் சத்து முழுவதும் பயிர்களுக்கு எளிதில் கிடைப்பதில்லை. இக்குறைபாடும் தொழு உரங் களில் போடப்படும் சூபர் பாஸ்பேட்டினால் நீக்கப்படுகின்றது.

தொழு உரங்களை உடனடியாக உபயோகப்படுத்த முடி யாது. ஆகையால் சேகரிக்கப்பட்ட தொழு உரத்தை மழை, சூரிய ஒளி இவற்றிலிருந்து பாதுகாத்தல் அவசியம். நிலங்களில் போடவேண்டிய சமயம் தவிர, மற்ற சமயங் களில் இவற்றை ஊறி விடுதலோ, அல்லது வேறு இடம் மாற்றுவதோ கூடாது. இவ்விதம் செய்வதனால் தொழு உரங்களில் உள்ள பயிர்ச் சத்தின் திறன் விரைவில் குறைந்து விடுகின்றது.

தொழு உரங்களை போடும் முறையும் அளவும்

தொழு உரங்களை சரிவான நிலங்களில் போடுவதால் அவற்றின் சத்து, தண்ணீரில் கரைந்து நிலத்திலிருந்து வெளியேற்றப்படுமாதலால், கூடியவரை சமமான நிலங் களிலேயே போடவேண்டும். நல்ல விளைச்சலுக்கு அதிக மாகப் போடுவதைக் காட்டிலும் குறைவாகப் போடுதலே நன்று. ஒரு ஏக்கருக்கு 10 டன் தொழு உரம் போது மானது.

இரசாயன உரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் சமயத்தில், தொழு உரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய தழைச் சத்து மிகக் குறைவாகவே தோன்றும். ஆனால் தொழு உரத்தை உபயோகிப்பதால், நில வளத்தை ஓரளவு காக்கக்கூடிய கரிமப் பொருள் (organic matter) மிக எளிதிலும் குறைந்த செலவிலும் கிடைக்கின்றது. மேலும் தொழு உரத்தில் உள்ள தழைச் சத்து அனைத்தும் உடனடியாக முதல் பயிர்களுக்கே கிடைத்து விடுவதில்லை. சுமாராக ஒன்றில் பாதி சத்துக்கள்தான் முதற் பயிர் களுக்குக் கிடைக்கும். ஒரு வருடத்தில் போடப்படும் தொழு உரத்தினால் சுமாராக 3 அல்லது 4 வருடங்கள் வரை நல்ல விளைச்சலை அடையலாம்.

தானியச் சேமிப்பு தாயக மீட்பு.

பூச்சி, பூசண நோய்களைத் தொலைக்கச் சிறந்த கருவி

தூவானம் செய்ய



கேடார்

அசைப்பு ஸ்ப்ரேயர்

200 ராத்தல் அழுத்த சக்தியுடன் ஒரே மாதிரியாகத் தொடர்ந்து தூவானம் செய்யும்.

இந்த எல்லா ஸ்ப்ரேயர்களும் மானியத் திட்டத்தின்கீழ் வழங்க, தமிழ்நாடு விவசாய இலாகா நெறியாளரால் 'ரேட் கான்ட்ராக்ட்' திட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்டவை. உங்கள் வட்டார விவசாய விளக்குனர் மூலமாகவோ, விவசாய வளர்ச்சி அதிகாரி மூலமாகவோ இந்த ஸ்ப்ரேயர்களை நீங்கள் பெறலாம்.



மூன்று விதங்களில் தூவானம் செய்யும் ஹை-ட்ரீ லான்சுடன்கூடிய கேட்டார் அசைப்பு ஸ்பிரேயர்

எல்லா மரங்களுக்கும், நிலக்கடலை, தோட்டப் பயிர்களுக்கும் உபயோகியுங்கள்.



மாருத்

கையழுத்த ஸ்ப்ரேயர்

நாற்றங்காலிலும், விளைநிலப் பயிர்களிலும், பூச்சி பூசண நோய்களைக் கட்டுப்படுத்தத் தகுந்தது.

கையாலும், சக்தியாலும் இயக்கும் இதர பல ஸ்ப்ரேயர்களும், டஸ்டர்களும் நாங்கள் தயாரிக்கிறோம்.



அசைப்பு ஸ்ப்ரேயர்

கேடார்-கோ.·.பி

பாக்கு, தென்னை மரங்களுக்கு உபயோகியுங்கள்.

மற்ற விபரங்களுக்கு கீழே கண்ட விலாசங்களில் விசாரியுங்கள் :

தயாரிப்பாளர்கள்

போன் எண்கள் 84221, 84245

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

தந்தி : கில்லோகஸ்ட் மலாடு.

மலாடு—பம்பாய் 64.

ஏஜெண்டுகள் :

ரங்கஸ்வாமி அண்டு கோ.,

93, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு, பெங்களூர்-2, மைசூர் ராஜ்யம்.

தந்தி : ஹோன்விட் போன் : 2971.

விவசாய செய்திக் கதிர்

(விரிவினைப் பிரிவு, கோவை.)

பண்ணைத் திட்டம்-உற்பத்திக்கு உகந்த வழி

ஒவ்வொரு விவசாயிடமுள்ள நிலம், ஆள் வசதி, முதல், மற்றும் பிற வசதிகளைச் சிறந்த முறையிலும் சிக்கனமாகவும் உபயோகித்து அப்பண்ணையின் உற்பத்தியையும், வருவாயையும் அதிகரிப்பதே பண்ணைத் திட்டத்தின் நோக்கம். ஒரு விவசாயி தன் பண்ணை அலுவல்களுக்காகச் செலவிடும் பணம், உழைப்பு முழுவதும் தக்க முறையில் உபயோகமாகின்றனவா, அவற்றிற்கு ஏற்ற பலன் கிடைத்திருக்கிறதா, அல்லது அவற்றில் ஏதேனும் ஒரு பகுதி பலன் எதும் நல்காமல் வீணாகி விட்டதா போன்ற குற்றம் குறைகளைக் கண்டறிய பண்ணைத் திட்டம் உதவுகிறது. அவ்வாறு உள்ள குற்றம், குறைகளை அகற்றி, பண்ணைக்காகச் செலவிடப்படும் பணம், உழைப்பு ஆகியவை சிறந்த முறையில் பலன் தரும் வகையில் பண்ணைத் திட்டம் அமைக்கப்படுகிறது.

விவசாயிகளிடையே பண்ணைத் திட்ட மனப்பான்மையைப் புகுத்துவதற்கும், திருந்திய விவசாய முறைகளைக் கையாள வேண்டியதின் அவசியத்தை உணர்த்துவதற்கும் ஒரு முன்னோடித் திட்டமாக விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்திலுள்ள ஆராய்ச்சி அலுவலர்கள் அனைவரையும் கொண்ட "விவசாய விளைச்சலைப் பெருக்க விஞ்ஞானிகள் குழு" (Scientific corps for agricultural production) ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. கோவை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தின் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள விவசாயிகளின் பலவகைப்பட்ட பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக ஒவ்வொரு குழுவிலும் உழவியல், பயிர்ப்பாதுகாப்பு, ரசாயனத்துறை போன்ற பல துறைகளிலுமுள்ள ஆராய்ச்சியாளர்கள் அடங்கியிருக்கிறார்கள்.

முதலில் இக்குழுவைச் சேர்ந்த நபர்கள் விவசாயிகளைச் சந்தித்து அவர்கள் தற்போது கடைப்பிடித்துவரும் சாகுபடி முறைகளைக் கேட்டறிவார்கள். பின்பு அம்முறைகளிலுள்ள குற்றம் குறைகளை நீக்கி, திருந்திய விவசாய முறைகள் அனைத்தையும் கடைப்பிடிக்கும் வகையில் அவ்விவசாயிகளுக்குத் திருந்திய பண்ணைத் திட்டம் ஒன்றைத் தயாரித்துத் தருவார்கள். இத் திட்டத்தைப் பின்பற்றுவதன் மூலம் விவசாயிகள் தங்கள் விளைச்சலை கணிசமான அளவுக்கு அதிகரிக்கலாம்.

மானாவாரி (Semidry) நெல் விதைப்பு

ஒரு ஏக்கருக்குத் தேவையான விதையளவையும், விதைப்பதற்கு முன் விதைகளை நீரில் ஊறவைப்பதால் ஏற்படும் நன்மைகளை நிர்ணயிக்கவும் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. இப் பரிசோதனைகளிலிருந்து வரிசையில் ஊன்றுவதற்கும், கலப்பைக் காலில் விதைப்பதற்கும் ஏக்கருக்கு 80 ராத்தல் விதை தேவைப்படும் என்று தெரிகிறது. கை விதைப்புக்கு ஏக்கருக்கு 60 ராத்தல் விதை தேவைப்படுகிறது விதைகளை விதைப்பதற்குமுன் நீரில் ஊறவைப்பதால் நன்மை எதும் இல்லை என்றும், விதைகளை வரிசையில் ஊன்றுவது கலப்பைச் சாலில் விதைப்பதைவிட சிக்கனமானது என்றும் தெரிய வருகிறது.

உங்கள் ஆமணக்குப் பயிருக்கும், கடலைக்கும் உரமிடுங்கள்

ஆமணக்குப் பயிருக்கு 2½ டன் தொழு உரமும், 30 ராத்தல் தழைச்சத்தும் தேவைப்படும் என்று பரிசோதனைகளிலிருந்து தெரிகிறது. சாதாரணமாக இது கடலையுடன் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்யப்படுவதால் ஏக்கருக்கு தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து ஆகியவற்றை முறையே 10 : 20 : 30 என்ற விகிதத்தில் இடுவதன் மூலம் கடலை, இரு பயிர்களின் மகசூலையும் அதிகரிக்கலாம்.

ஆமணக்கையும், மொச்சையையும் கலப்புப் பயிராக சாகுபடி செய்வதும் இலாபகரமானது என்று தெரிய வந்துள்ளது.

உரமிடுவதுடன் பயிர்ப்பாதுகாப்பு முறைகளையும் கையாளுங்கள். ஆமணக்கைத் தாக்கும் பூச்சிகளில் முக்கியமானது காவடிப் புழு 2—2½ அங்குல நீளமுள்ளது ; சாம்பல் அல்லது கருப்பு நிறமுடையது. இப் புழுக்கள் இலையைத் தின்று செடிகளை நாசம் செய்கின்றன. இவற்றின் தாக்குதல் தீவிரமாக இருந்தால் செடி முழுவதும் இலையின்றி காணப்படும். முடிந்த வரை இப் புழுக்களைக் கையால் எடுத்து அப்புறப்படுத்தலாம். பாரதியான் (0·025 %) அல்லது எண்டிரின் (0·02%) மருந்தைத் தெளிப்பதன் மூலம் இதை ஒருவாறு சட்டுப்படுத்தலாம்.

சுடுமல்லியை எதிர்க்கும் சோளம்

கோ. 1 (பெரிய மஞ்சள் சோளம்) மானாவாரிப் பயிராகச் சாகுபடி செய்யப்படும் இந்த பெரிய மஞ்சள் சோள ரகம் ஏக்கருக்கு 400 கிலோ தானியமும், 2,000 கிலோ தட்டையும் அளிக்கிறது. ஆனால் இது சுடுமல்லி (பல்லிப்பூண்டு) என்ற ஒட்டுண்ணிச் செடியால் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

கோ. 1 ரகத்தில் சுடுமல்லியை எதிர்க்கும் தன்மையை புகுத்துவதற்கான ஆராய்ச்சி, கோவை சிறுதானிய ஆராய்ச்சிப் பண்ணையில் மேற்கொள்ளப்பட்டது. 'பொங்கன் ஹைலோ' (Bongan hilo) என்ற ஆப்பிரிக்க ரகம் சுடுமல்லியால் தாக்கப்படுவதில்லை. கோ. 1 ரகமும், இந்த ரகமும் ஒட்டு சேர்க்கப்பட்டது. இதன் விளைவே

ஏ. எஸ். 9028 என்ற புதிய ரகம். இது சுடுமல்லியின் தாக்குதலை எதிர்க்கவல்லது. கோ. 1 சோளத்தைவிட 30–68 சதம் வரை அதிக மகசூலையும் அளிக்கிறது.

இந்த ரகம் கோவை மாவட்டத்திற்கு மிகவும் ஏற்றது. சுடுமல்லி அதிகமாகக் காணப்படும் மற்ற மாவட்டங்களிலும் இதைச் சாகுபடி செய்யலாம். ஜூலை–டிசம்பர் மாதங்களில் இதைப் பயிரிடவேண்டும். மற்ற மாவட்டங்களில் மானு வாரித் தீவனப் பயிராக இதை வளர்க்கலாம். 135–140 நாட்களில் இது அறுவடைக்கு வருகிறது. இந்த ரகம் விநியோகத்துக்கு வரும் நாளை விவசாயிகள் ஆர்வத் தோடு எதிர்பார்க்கலாம்! விவசாயிகள் தங்கள் வயல் களில் ஆரம்ப சாகுபடியைத் துவக்க கோடை மழையை ஆவலோடு எதிர்நோக்கியிருப்பார்கள். கோடை மழைக்கு பின் இரும்புக் கலப்பையால் உழுவதால் நிலம் நன்கு பண்படுத்தப்படும்.

கம்பு நேப்பியர் ஒட்டுப் புல்

கம்பு நேப்பியர் ஒட்டுப் புல், கால்நடைகளுக்கேற்ற ஒரு சிறந்த பசுந் தீவனப் புல். கம்பையும், நேப்பியர் என்ற ஒருவகைப் புல்லையும் சேர்த்துக் கிடைத்ததொரு ஒட்டுப்புல். நிரந்தரமாக வளரக்கூடியது.

இப்புல் கழிவு 'நீர்ப்பாசனத்தில்' (Sullage) எக்கருக்கு 1,90,000 ராத்தல் வரை பசுந்தீவனம் அளிக்கிறது. இதை வயல் வரப்புகளிலும், பாசன வாய்க்கால்களின் ஓரங் களிலும் வளர்க்கலாம். தனிப்பயிராக வளர்க்க 3 அடி இடைவெளியில் உள்ள கால்களில் 2½ அடி இடைவெளி யில் புற்கட்டைகளை (slips) நட வேண்டும். வாரத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்சலாம். கழிவு நீர் இப்புல்லுக்கு மிகவும் ஏற்றது என்று தெரிகிறது.

இரண்டு மாதத்திற்கு ஒரு முறை புல்லை அறுவடை செய்யலாம். தேவைக்கு ஏற்றபடி, சாகுபடி செய்யப்படும் பரப்பை சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலிருந்தும் அன்றாடத் தேவைக்குத் தக்க பசுந் தீவனம் அறுவடை செய்யலாம். ஒரு எக்கரிலிருந்து ஆண்டுக்கு ரூ. 750—1,000 வரை வருவாய் கிடைக்கும். சிறந்த முறையில் பாசனம் செய்தும், உரமிட்டும், அடர்த்தி யாக வளர்ந்த பின் அவற்றில் 4-ல் ஒரு பாகத்தைக் களைத்தும் (quartering) வந்தால் இதைப் பல ஆண்டுகள் வைத்துப் பராமரிக்கலாம்.

கடலை அறுவடை செய்யும் கருவி

எளிதாகவும் விரைவாகவும் கடலையை அறுவடை செய்யும் கருவி ஒன்று கோவை விவசாய ஆராய்ச்சி நிலை யத்தைச் சேர்ந்த பொறியியல் ஆராய்ச்சி நிபுணரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இக் கருவியை உபயோகிப்பதால் கடலைக் கொட்டைகள் சேதமாவதில்லை. சில சமயங்களில் கடலைச் செடியின் இலை, தண்டுகள் இக்கருவியினிடையே சிக்கிக் கொள்வதால் அவற்றை அவ்வப்போது அகற்ற நேரிடும்.

மாடுகளால் இழுக்கப்படும்போது, பிறைச் சந்திர வடிவ முள்ள கத்தி போன்ற பாகம் நிலத்திற்குள் சென்று மண்ணைக் கிளறுவதால் மண்ணிலிருந்து கடலைக் கொத்துக் கள் வெளியே தள்ளப்படுகின்றன. கத்தி போன்ற பாகம் மண்ணிற் செல்லும் ஆழத்தைத் தேவைக்குத் தக்கப்படி மாற்ற, கையால் இயக்கக் கூடிய ஒரு நெம்பு கோலும் பொறுத்தப் பட்டிருக்கிறது. மாடுகள் இழுக்கும் இக் கருவியை கலப்பைக்காலிலும், வரிசையிலும் விதைத்த பயிரில் ஓட்டலாம். ஒரு நாளில் (8—10 மணி) 2½—3 எக்கர் நிலத்தில் கடலை அறுவடை செய்யலாம்.

சாதாரணமாகச் செய்வது போல் ஆட்களைக் கொண்டு அறுவடை செய்தால் எக்கருக்கு ரூபாய் 7-லிருந்து 10-வரை செலவாகிறது. ஆனால் அறுவடை செய்ய இக் கருவியை உபயோகித்தால் ஆகும் செலவு ரூபாய் 4—5 தான். இதன் விலை ரூ. 400.

இக் கருவியைப் பற்றி மேலும் அறிய விரும்புவோர் விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த விவசாயப் பொறியியல் நிபுணருக்கு எழுதவும்.

விவசாயத் துறை செய்தி

நகர கம்போஸ்ட் திட்டத்தின் கீழ் 1961–62-ம் ஆண்டு காலத்தில் கம்போஸ்ட் உரத்தயாரிப்பில் சிறந்த பணியாற்றி வரும் கீழ்கண்ட ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சுழலும் கேட யங்கள் வழங்க அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

சீனியர் சுழலும் கேடயங்கள் பெறும் முனிசிபாலிடிகள்

1.	பொறுக்கி யெடுக்கப்பட்ட நகராட்சி	கோயம்புத்தூர்
2.	முதல் பிரிவு நகராட்சி	.. பொள்ளாச்சி
3.	2-வது பிரிவு நகராட்சி	.. பாளையங்கோட்டை
4.	3-வது பிரிவு நகராட்சி	.. கம்பம்

ஜூனியர் சுழலும் கேடயங்கள் பெறும் பஞ்சாயத்துகள்

	மாவட்டம்.	பஞ்சாயத்து.
1.	செங்கல்பட்டு	ஆலந்தூர்
2.	வடஆற்காடு	தாராபடவேடு.
3.	திருச்சி	துறையூர்
4.	மதுரை	திருமங்கலம்
5.	தஞ்சாவூர்	அம்மாபேட்டை
6.	கோயம்புத்தூர்	சத்தியமங்கலம்
7.	திருநெல்வேலி	கோவில்பட்டி

சித்திரை-வைகாசி மாத விவசாய குறிப்புகள்

நெல்

(நெல் ஆராய்ச்சி நிபுணர்)

சொர்ணவாரி, சம்பா, குறுவை, கார் பயிர்களுக்கு நாற்றங்கால் தயாரித்து விதைக்கவும். முன்னதாக நட்ட (கார் அல்லது சொர்ணவாரி) பகுதிகளில் முதன் முறை 75 ராத்தல் சி. ஏ. என். உரமிடவும். அந்தந்த பகுதிகளுக்கு ஏற்ற பொறுக்கு ரகங்களை தேர்ந்தெடுத்து விதைக்கவும்.

பொறுக்கு நெல் ரகங்கள்

சொர்ணவாரி.—கோ. 29, டி. கே. எம். 6.

குறுவை.—ஏ. டி. டீ. 20, ஏ. டி. டீ. 3, கோ. 13, கோ. 29, டி. கே. எம். 6.

கார்.—கோ. 29, டி. கே. எம். 6, ஏ. எஸ். டி. 1, ஏ. எஸ். டி. 3, ஏ. எஸ். டி. 8, ஏ. எஸ். டி. 9.

கோவை.—நெல் நாற்றங்காலுக்குத் தேவையான தழை உரத்திற்கு சணப்பும், நடவு வயல்களுக்கு செஸ்பேனியாவும் விதைக்கவும். எக்கருக்கு 50–60 ராத்தல் விதை தேவைப்படும்.

சிறுதானிய பயறு வகைகள்

(சிறுதானிய ஆராய்ச்சி நிபுணர்)

மானவாரி சோளம், கம்பு, பயறு விதைப்புக்கு நிலம் தயாரித்தல். முன்பாகவே மழை கிடைத்தால் கம்பையும் துவரையையும் கலந்து விதைக்கலாம். இறைவை ராகி விதைப்புக்கு கே. 2 ஒரு சிறந்த ரகம். மழை பிடிக்கு முன் சோளம் அறுவடை செய்யப்பட வேண்டும்.

பருத்தி

(பருத்தி ஆராய்ச்சி நிபுணர்)

மாசிப்பட்ட காம்போடியா பருத்தி.– விதைத்து 40-50 நாட்களுக்குப் பின், 2-வது முறையாக எக்கருக்கு 100 ராத்தல் அமோனியம் சல்பேட் இட்டு மண்வெட்டியாலோ அல்லது ரிட்ஜர் பொறுத்தப்பட்ட ஜூனியர் ஹோ கருவியாலோ மண் அணைக்கவும். தத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 2-வது தடவை பாலிடாலை பூசண மருந்துடன் கலந்து அடிக்கவும். (1 அவுன்ஸ் பாலிடாலுக்கு 12 காலன் தண்ணீர்) இரசாயனம் உரமிட்டு, மருந்தடித்தவுடன் பயிருக்கு தண்ணீர் பாய்ச்சவும்.

நெல் அறுவடைக்குப்பின் வயல்களில் பயிரிடும் பருத்தி

3-வது முறை பாலிடால் மருந்து (பூசண மருந்துடன் கலந்து) அடிக்கவும். பயிரைப் பொறுத்து இருமுறைகள் தண்ணீர் விடலாம்.

எண்ணெய் வித்துக்கள்

(எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிபுணர்)

நிலக்கடலை

இறைவை.—வரிசையில் விதைத்த பயிரில் தந்திகள் ஓட்டி 2-வது முறை களை எடுக்கவும்.

மானவாரி.—புஞ்சை நிலத் தயாரிப்பு—இரும்புக் கலபையால் 4–6 முறைகள் நிலத்தை உழுது பண்படுத்தல்; உரமிடுதல்—எக்கருக்கு 10 வண்டி கம்போஸ்ட் அல்லது தொழு எருவுடன், 60 ராத்தல் சி. ஏ. என். 60 ராத்தல் முயூரியேட் ஆப் பொட்டாஷ், 112 ராத்தல் சூப்பர் முதலியவற்றை இடவும். மேற்கூறிய இரசாயன உரங்களுக்கு பதிலாக எக்கருக்கு 280 ராத்தல் உரக்கலவை (நெ. 3) யை உபயோகிக்கலாம். இரும்புக் கலப்பை அல்லது ஜீனியர் ஹோ ஓட்டி உரத்தை மூடவும். விதைப்புக்கு கடலையை தயாராக வைக்கவும்.

சேலம், கோவை, திருச்சி பகுதிகளுக்கு இது விதைப்புக் காலம். முன்பட்டப் பயிரில் முதன்முறை கொத்திக் கொடுத்து களையெடுக்கவும்.

தென்னை

நல்ல கோடை மழை பெய்தால் இதற்கு முன் உழாதிருந்தால் ஒரு முறை உழுது கொடுக்கவும். மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி தொடர்ந்து பயிர்ப் பாதுகாப்பு முறைகளை (குறிப்பாக தென்னை கரு வண்டுக்கு) கையாளவும்.

பழம் காய்கறி வகைகள்

(தோட்டக்கலை ஆராய்ச்சி நிபுணர்)

வைகாசிமாத குறிப்புகள்

திராட்சை கவாத்து துவங்கலாம். தினுசுக்கு ஏற்ப 4–7 கணுக்கள் விட்டு கவாத்து செய்யவேண்டும் இதன் பின்னர் எரு இட்டு நீர்பாய்ச்சவும். செடியின் வயதைப் பொறுத்து தொழு எரு 200–500, பசுந்தாள் உரம் 200–500 ராத்தல், அமோனியம் சல்பேட் 2–5 ராத்தல், சூப்பர் 2–5 ராத்தல், பொட்டாஷ் 2–4 ராத்தல் முதலிய வற்றை போடவும்.

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் மே மாதம் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விவரம்

கிடைக்குமிடம்.	கையிருப்பு எண்ணிக்கை.	ஒன்றின் விலை. ரூ.	ந.பை.
தென்னை நாற்றங்கால்—			
கோயமுத்தூர், கோயமுத்தூர் ஜில்லா.	500	0	65
குடியாத்தம், வட ஆற்காடு ஜில்லா.	10,000	0	65
சோழவந்தான், மதுரை ஜில்லா.	9,000	0	65
விசுவாசபுரம், கன்யாகுமரி ஜில்லா.	3,500	0	65

விதைக்குமுன் வித்துக்கு மருந்திடு.

பாரியின்

காளான் மருந்துகள்

Parry's

செடிகளுக்கு எந்த நோயும்
வராமல் நம்பகமாகப் பாதுகாக்கும்

பாரீகாப்:

அணுத்துகளாக்கப்பட்ட தாமிர ஆக்ஸிக்ளோரைடு மற்றும் தக்க பொருள்களைக் கூட்டி பல வகை சக்திகளில் பக்குவப் படுத்திய சக்திவாய்நத காளான் மருந்து. ஜலத்தில் கரைத்துத் தெளிக்கும்படி 50% தாமிரம், பாரீகாப்-50 கலந்த பௌடராகவும், எளிதில் தூவும்படி 4% தாமிரம், பாரீகாப்-400 கலந்த பௌடராகவும் கிடைக்கின்றன.

ஸல்மைட் (ஜலத்தில் கரைக்கக்கூடிய பௌடர்)

வெறும் கந்தகம் சேர்க்கப்பட்டதும், காளான் மற்றும் செடிச் சிலந்திகளைத் (மைட்) திறமையாக ஒழிக்கவல்லதுமான மருந்து. பருத்தி, தேயிலை, ஆமணக்கு, புகையிலை, மிளகாய், ஆரஞ்சு, திராக்ஷை ஆகிய செடிகளைப் பாழாக்கும் சிலந்திகளை (மைட்) ஒழிக்க ஸல்மைட் நன்கு பயன்படும். ரப்பர், புகையிலை, மா, திராக்ஷை, அலங்காரச் செடிகள், காய்கறி வகைகளைப் பாதிக்கும் தேமல்நோய்களைக் கட்டுப்படுத்தவும் இது சிறந்தது.

விவரங்களுக்கு எழுதுங்கள்:

ஈ. ஐ. டி. பாரி லிமிடெட்,
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)
பெர்டிலைசர் இலாகா (ஐ & எப்.) டேர் ஹவுஸ், சென்னை - 1.

Z-635TM

வருவாய்த்துறை கழகம் (BOARD OF REVENUE) விவசாயிகளுக்கு வழங்கும் சலுகைகள்

(1) சிறிய நீர்ப்பாசன சிறப்புத் திட்டம் (SPECIAL MINOR IRRIGATION PROGRAMME)

இத்திட்டம் 1953-ம் ஆண்டிலிருந்தே அமுலில் இருந்து வருகிறது. இதன் கீழ் ஏரி, குளங்கள் மராமத்து செய்தல், ஏரி கால்கள் செப்பனிடுதல், சிறிய அணைக்கட்டுகள், வடிகால்கள் முதலியவை செய்து கொடுத்தல் ஆகிய வேலைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவ்வேலைகளை மராமத்து இலாகாவினரும், உணவு உற்பத்தி இலாகாவினரும் எடுத்து நடத்துகின்றனர். இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 10 லக்ஷத்திற்குக் குறைந்த சிறிய வேலைகளே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் வேலைகளை எடுத்துக் கொள்ள ரூ. 800 லக்ஷம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(2) குளங்களைத் தூரெடுத்து செப்பனிடும் திட்டம்.
(Desilting-cum-Reclamation of Irrigation Tanks)

இத்திட்டம் முதன் முதலில் 1956–57-ம் வருஷம் செங்கல்பட்டு மாவட்டத்தில் பரீக்ஷார்த்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் ஏனைய மாவட்டங்களிலும் அமுலில் இருந்து வருகிறது. இதன்கீழ் தூர்ந்து போன ஏரி குளங்களை தூரெடுத்து அவைகள் பூரண உபயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன. நிறைகுள மட்டமும் உயர்த்தப்பட்டு, தூரெடுத்த மண்ணின் உதவியால் ஏரிகளின் நீர்ப்பிடிப்பில் மூழ்கிய நிலங்களும் செப்பனிடப்படுகின்றன. இத்திட்டத்திற்கு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 80/- லக்ஷம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) புதிய கிணறு மான்ய திட்டம்
(New Well Subsidy Scheme)

கிணற்று நீர்ப்பாசனத்தின் மூலம், பயிர்களை விளைவிப்பதற்காக அரசாங்கம் கிணறு ஒன்றுக்கு ரூ. 1;000 வரை கடன் கொடுத்து குடிகளுக்கு உதவுகிறது. கிணறு வெட்டும் செலவு அதிகமாகும் பகுதிகளில் இம்மாதிரியான கடன்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் அபிப்பிராயத்துக்கு உட்பட்டு ரூ. 2,000 வரை கொடுக்கப்படலாம் என்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கின்றது. இம்மாதிரியாக வெட்டப்பட்ட கிணறுகள் ஒரு எக்கர் நிலத்திற்கு போதுமான பாசன வசதி அளிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். இந்தக் கடன் தொகைகள் இரண்டு தவணைகளில் கொடுக்கப்படுகின்றன. கடன் தொகையில் ஒரு பாதி முதல் தவணையாகவும், மற்ரெரு பாதி முதல் தவணைத் தொகைக்கு குறையாமல் செலவழிக்கப்பட்ட பின்னும் கொடுக்கப்படுகிறது. கிணறு வேலை திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டவுடன், கொடுக்கப்பட்ட கடன் தொகையில் கால்பாகமோ, அல்லது பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் மதிப்பில் கால் பாகமோ, இவை இரண்டில் எது குறைவாக உள்ளதோ, அந்த தொகை கிணறு மான்யமாக முடிவு செய்யப்படுகிறது. மீதி முக்கால் பாகம் தக்காவி கடனாக பாவிக்கப்பட்டு பத்து தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. அதிக பட்சமான குடிகள் இந்த திட்டத்தின் பலனை அடைய வேண்டுமென்பதைக் கருதி, ஒரு குடியானவர், அவருக்கு ஒரு கிராமத்திலோ, பல கிராமங்களிலோ எவ்வளவு நிலங்களை அடைந்திருந்த போதிலும், ஒரே ஒரு கிணற்றுக்குத்தான் இந்த திட்டத்தின் கீழ் உதவி பெறலாம் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

(4) ரசாயன உர பகிர்வு முறைத் திட்டம்
(Distribution of Chemical Fertilisers)

விவசாய உற்பத்தியை நிரந்தரமாக அதிகப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளில் பயிர்களுக்கு ரசாயன உரங்களை உபயோகிப்பதும் ஒன்று. பயிர்களுக்குத் தேவையான (1) தழைச்சத்து (Nitrogen) (2) மணிச்சத்து (Phosphorus) (3) சாம்பல் சத்து (Potassim) இவைகளை இரசயன உரங்கள் மூலம் தான் பெறலாம். இயற்கை வளச் சத்து மேற் சொன்னவைகளை பயிர்களுக்குப் போதிய அளவு கொடுப்பதில்லை. ஆகவே பயிர்களுக்கு ரசாயன உரம் இன்றியமையாதது. இரசாயன உரங்களை உபயோகித்து நாட்டின் உணவையும், பணப் பயிர்களையும் உற்பத்தியையும் பெருக்குவது உழவர்களின் மிகச் சிறந்த கடமையாகும்.

அரசாங்கம் நடத்தும் இத்திட்டத்தின் கீழ், அமோனியம் சல்பேட், யூரியா, அமோனியம் சல்பேட் நைட்ரேட், கால்சியம் அமோனியம் நைட்ரேட் ஆகிய ரசாயன உரங்கள் வினியோகிக்கப்பட்டு வருகின்றன. கடந்த சில ஆண்டுகளாக குறைந்த அயல்நாட்டு நாணயமாற்று காரணமாக, நம் ராஜ்யத்தில் ரசாயன உரங்கள் போதிய அளவு கிடைப்பதில்லை. எங்கும் பற்ருக்குறையாக இருந்து வந்தது. ஆனல் இப்பொழுது நம் நாட்டில் நங்கல் (Nangal), ரூர்கேலா (Rourkela) முதலிய இடங்களில் ரசாயன உற்பத்திச் சாலைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால், இவ்வாண்டு நம் ராஜ்யத்திற்கு நாம் கேட்டுக் கொண்டதில் 91 சத விகிதம் ரசாயன உரங்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதனல், எந்தவித தடங்கலும் இல்லாமல் உர வினியோகம் செய்யும்படியும்; விவசாயிகளுக்கு வேண்டிய அளவு கொடுக்கும்படியும் ஜில்லா கலெக்டர்களுக்கு ரெவின்யூ போர்டாரால் உத்திரவிடப்பட்டிருக்கிறது.

மேற் சொன்ன உரங்களில் கால்சியம் அமோனியம் நைட்ரேட் (Calcium Ammonium Nirate) மிக்க மலிவானது. இதனுடைய விலை சமீபத்தில் குறைக்கப்

(7-ம் பக்கம் பார்க்கவும்)

மாருத் சார்ஜ் பம்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினுல் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்
(No. C. 1206691/61— 14—4—1962)

(சென்னை விவசாய டைரக்டர் கடிதம் No. C. 163213/62—7-7-1962 மூலம் காண்ட்ராக்ட் விகிதத்தில் உட்பட்டது)



குணங்கள் :—

1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்லில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தகட்டினுல் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூட்ஸ் வாத்துகழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



விலை விவரம் :—

(சென்னை அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலை)

18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	290	ரூபாய்
14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டான்க்	280	ரூபாய்
மாருத் சார்ஜ் பம்பு — — —	280	ரூபாய்

செயலாளர்கள் :—

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :—

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,

93, ஸ்ரீநரசிங்க ராஜா ரோடு, பெங்களூர்.

1963-ம் ஆண்டு ஜனவரி மாதத்திய கால நிலை அறிக்கை

(சி. பாலசுப்ரமணியன், ம. வி. ஜெயராமன், ஜீ. ரங்கநாதன், விவசாயக் காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.)

இம் மாதம் முதல் நான்கு தினங்களில் தமிழ்நாட்டில் பொதுவாக வறட்சி நிலவியது. தமிழ்நாட்டின் தென் பாகங்களில் 5-ம் தேதி சிற்சில இடங்களிலும் 6-ம் தேதி ஆங்காங்கும் மழை பெய்தது. மறு நாள் தமிழ்நாடு முழுவதிலும் மழை ஆங்காங்கு இருந்தது. 8-ம் தேதி முதல் அடுத்த மூன்று நாட்கள் ஆங்காங்கு கனமான மழை பெய்தது. 9-ம் தேதி பாளையங்கோட்டையில் 293 சென்டிமீட்டர் (11·53 அங்குலம்) மழை பெய்தது. 13-ம் தேதி முதல் 17-ம் தேதி வரை மூன்று நாட்கள் சிற்சில இடங்களில் மழையும் இரண்டு நாட்கள் வரட்சியும் நிலவியது. பின்னர் 18-ம் தேதி முதல் 24-ம் தேதி வரை பொதுவாக வறட்சி நிலை நிலவியது. ஆனால் 21-ம் தேதி தமிழ் நாட்டின் சிற்சில இடங்களில் மழை பெய்தது. தொடர்ந்து 25-ம் தேதி சிற்சில இடங்களிலும், 26-ம் தேதி பரவலாகவும், மீண்டும் 27-ம் தேதி சிற்சில இடங்களிலும் மழை பெய்தது. பின்னர் மூன்று நாட்கள் வறட்சி நிலவியது. இம் மாதக் கடைசி நாளில் தமிழ்நாட்டில் சிற்சில இடங்களில் மழை பெய்தது.

இம் மாதத்தில் ஆறு நாட்களில் இரவு வெப்ப நிலை சராசரிக்குக் குறைந்திருந்தது.

கால நிலையும் பயிர் வளர்ச்சியும்.—செங்கற்பட்டு மாவட்டத்தில் பெய்த மழை நெற்பயிருக்கு உகந்ததாயிருந்தது. வட ஆற்காடு மாவட்டத்தில் பெய்த மழை நெற்பயிருக்கு ஏற்றதாயிருந்தது. ஆனால் கரும்புப் பயிர் சிற்சில இடங்களில் தலை சாயவும் காரணமாயிருந்தது. தென் ஆற்காடு மாவட்டத்தில் பெய்த மழை எள் பயிருக்கும் மற்றும் நிலங்களை உழுது பண்படுத்தவும் உகந்ததாயிருந்தது. ஆனால் ஆமணக்கில் கொக்கிப் புழுவும், தத்துப் பூச்சியும், இலைப் புள்ளி நோயும் காணப்பட்டன. எள் பயிரில் இலைப் கூட்டுப் புழுவும், பெருமளவில் வாடல் நோயும் காணப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழை தாளடி நெற் பயிருக்கும், காய்கறிகளுக்கும் ஏற்றதாயிருந்து. ஆனால் சம்பாப் பயிர் தலை சாய்ந்து விழ இம் மழை காரணமாயிருந்தது. நெற்பயிரில் குருத்துப் பூச்சியும் சூரை நோயும் சிறிதளவு கண்டன. ஆனால் எலியினால் சேதம் மிகவும் அதிகம். நிலக்கடலை, எள் விதைப்பதற்கு நிலங்களை தயாரிக்கவும் முடிந்தது.

திருச்சி மாவட்டத்தில் பெய்த மழை தாளடி நெற் பயிருக்கும், ராகி, கடலை மற்றும் கரும்புப் பயிருக்கு மிகவும் ஏற்றதாக இருந்தது. இங்கும் நெற் பயிருக்கு எலிகளால் சேதம் ஏற்பட்டது. மதுரை மாவட்டத்தில் பெய்த மழை நெல், பருத்தி, மிளகாய் மற்றும் காய்கறிப் பயிர்களுக்கும் உகந்ததாயிருந்தது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நெல், பருத்தி மிளகாய் பயிர்களுக்கு மழை ஏற்றதாயிருந்தது. மாசிப் பட்டம் பருத்தி விதைப்புக்கு நிலங்கள் பண்படுத்தப் பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்த மழையினால் கம்பு, சோளம், முதலியன அறுவடைக்கு வந்தன. மழையினால் பருத்தியில் பூக்களும், மொட்டுகளும் உதிர்ந்தன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த சிறிது மழை மாமரங்களிலும், திராட்சையிலும் சாம்பல் நோய் ஏற்படக் காரணமாயிருந்தது. நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலான நாட்களில் மூடுபனி காணப்பட்டது. இங்கு பெய்த மழை மரங்களுக்கும், செடி கொடிகளுக்கும் ஏற்றதாயிருந்தது.

கோயமுத்தூர் மாவட்டத்தில் பெய்த சிறிது மழையும் நிலக்கடலை, சோளம் முதலியன விதைக்க உதவியது. கோபி தாலுக்காவில் ராகி விதைப்பதற்கு இம் மழை உதவியது. ஈரோடு தாலுக்காவில் கோடைப் பருத்தி, நிலக்கடலை, கம்பு, விதைப்பதற்கும், ராகி நடவுக்கும் உதவியது. பொதுவாக கோவை மாவட்டத்தில் தோட்டக் கால் பருத்தியில் பெருவாரியாக காய்ப்புழுக்களும், சோளத்தில் தண்டுப் புழுவும், புகையிலையில் அசுவினியும் காணப்பட்டன. ஆனைமலை வட்டாரங்களில் நெற்பயிரை எலிகள் முதன்முறையாக பெருமளவில் தாக்கி பெருஞ் சேதம் விளைவித்தன.

குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழை யளவுகளும் பின்வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவு (அங்குலத்தில்).

தேதி. (1)	இடத்தின் பெயர். (2)	மழையளவு. (3)
8–1–1963	நாகப்பட்டணம் ..	4·13
9–1–1963	பாளையங்கோட்டை ..	11·53
9–1–1963	அம்பா சமுத்திரம் ..	7·62
10–1–1963	மீனம்பாக்கம் (சென்னை).	3·07

பிராந்திய மழையளவு (அங்குலத்தில்).

பிராந்தியத்தின் பெயர். (1)	ஜனவரி மாத மழை யளவு. (2)	சராசரியி லிருந்து மாறுபாடு. (3)	குறிப்பு. (4)
வட பிராந்தியம் ..	3·1	+1·9	அதிகம்.
கீழ்க்கரைப் பிராந்தியம் ..	5·5	+3·5	மிக அதிகம்.
மத்திய பிராந்தியம் ..	2·3	+6·0	ஷை
தென் பிராந்தியம் ..	6·0	+3·2	ஷை
மலைப் பிராந்தியம் ..	4·3	+2·3	ஷை

கோடைக் காய்கறி பயிரிட சிறந்த தருணம் இதுவே.

1963-ம் ஆண்டு ஜனவரி மாதக் கால நிலை அறிக்கை

மழையளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர். (1)	ஜனவரி மாத மொத்த மழை யளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் மொத்த மழை யளவு. (4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்)	5·3	+3·9	5·3
திருக்குப்பம் *	3·5	+2·3	3·5
வேலூர்	2·1	+0·6	2·1
குடியாத்தம் *	1·5	+0·8	1·5
கீழ்க்கரைப் பிராந்தியம்.			
பாலூர் *	6·0	+4·5	6·0
திண்டிவனம் *	3·2	+2·0	3·2
கடலூர்	4·7	+2·4	4·7
நாகப்பட்டினம்	7·4	+4·7	7·4
ஆடுதுறை *			
பட்டுக்கோட்டை *	6·0	+3·9	6·0
மத்தியப் பிராந்தியம்.			
சேலம்	1·4	+1·1	1·4
கோயம்புத்தூர் *	0·4	—0·2	0·4
கோயம்புத்தூர்	0·6		0·6
திருச்சிராப்பள்ளி	6·8	+6·0	6·8
தென் பிராந்தியம்.			
மதுரை	2·0	+1·2	2·0
பாம்பன்	6·7	+4·1	6·1
கோயில்பட்டி *	1·5	—0·2	1·5
பாளையங்கோட்டை	14·8	+13·1	14·8
அம்பாசமுத்திரம் *	14·9	+10·4	14·9
நாகர்கோவில் *	0·5	—5·8	0·5
கன்னியாகுமரி *	1·4	—0·2	1·4
மலைப் பிராந்தியம்.			
கொடைக்கானல்	8·1	+4·9	8·1
கூனூர் *	4·6	+1·0	4·6
உதகமண்டலம் *	2·6	+2·2	2·6
நஞ்சநாடு *	1·7	+1·1	1·7

குறிப்பு.—* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

தஞ்சை மாவட்டத்தில் எலி ஒழிப்பு வாரம்.—

கிராமத் தொண்டர் படையின் சிறந்த பணி.

ஒரத்தநாடு வட்டாரத்தைச் சேர்ந்த கிழக்கு கன்னுகுடி கிராமத்தில் ஒரே நாளில் கிராமத் தொண்டர் படையினரால் 1,500 எலிகள் வயல் வரப்புகளினின்றும் பிடிக்கப்பட்டன!

நெல் அறுவடைக்குப் பின் பிப்ரவரி—மார்ச் மாதங்களே வரப்பிலுள்ள வளைகளைத் தோண்டி எலிகளையும், குஞ்சுகளையும் பிடிப்பதற்கு ஏற்ற காலம். இவ் வருடம் தஞ்சை மாவட்டத்தில் எலி களால் நெற்பயிருக்கு ஏற்பட்ட சேதம் அளவிட முடியாது. இதனால் எலி ஒழிப்பு வாரத்திற்கு தனி கவனம் செலுத்தப்பட்டது.

1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி அன்று இந்த எலி ஒழிப்பு இயக்கம் கிழக்கு கன்னு குடி கிராமத்தின் மொத்த நிலப்பரப்பாகிய 150 ஏக்கரிலும் ஒரு சமுதாய கூட்டு முயற்சியாக ஆரம் பிக்கப்பட்டது. தஞ்சை மாவட்ட பயிர்ப்பாதுகாப்பு அலுவலர், வட்டாரவளர்ச்சி அலுவலர் இவர்கள் உதவி யுடன் கிராமத் தொண்டர் படையினர் வரப்புக ளனைத்தையும் வெட்டி ஒரே நாளில் 1,500 எலிகளைப் பிடித்தனர்.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு வருட காலத்திற்கு எலி ஒழிப்பு அலுவல்களை கவனிப்பதற்கென்று தனிப் பயிர்ப்பாதுகாப்புப் பணியாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் 3 மாதங்களில் வட்டாரம் வட்டாரமாகச் சென்று மாவட்டம் முழுவதிலும் வரப்பு வெட்டி எலி பிடிக்கும் வேலையை கவனித்து வருவர்.

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது. முன்பு ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ. 351·60 ந.பை.வாக இருந்தது. 1962-ம் வருடம் அக்டோபர் மாதம் 11-ந் தேதி முதல் இது ரூ. 318·64 ந.பை.வாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த ரசாயன உரத்தை உபயோகிப்பதால் பல வகையான லாபங்களைப் பெறலாம். கால்சியம் அமோனியம் நைட்ரேட் குறைந்த உப்புக்களைக் கொண்டது. 20·5 சதவீதம் தழைச் சத்துடையது. அதில் பாதி 'நைட்ரேட்' உருவத்திலும் மறு பாதி 'அமோனியா' உருவத்திலும் கிடைக்கிறது. புளிப்பு—கார நிலைஏற்படுத் தாமல் நடு நிலைமையாயிருப்பதால் பயிர் வளர்ச்சிக்குச் சாதகமான சூழ் நிலையை ஏற்படுத்துகிறது. நஞ்சைக்கும், புஞ்சைக்கும் பொருத்தமானது. ஒரு ராத்தல் தழைச் சத்தின் விலை மற்ற உரங்களின் தழைச்சத்து விலையைக் காட்டிலும் குறைவு. உழவர்களால் அதிகமாக விரும்பப் படும் அமோனியம் சல்பேட் கொடுக்கும் பலனையே இந்த உரமும் அளிக்கிறது. ஆனால் அதைவிட விலையில் இது மிகவும் மலிவாக உள்ளதாலும் நம் நாட்டில் இதை அதிகமாக உற்பத்தி செய்வதாலும், விவசாயிகள் பெரும்பாலும் இதையே உபயோகப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்

மே மாதத்திய கிராம நிகழ்ச்சி பற்றிய குறிப்புகள்

புதன் (1—5—1963)

இன்ப வாழ்வு—
கணை கொல்லியும் அதன் உபயோகமும்
நாட்டுப்பாடல்கள்
பட்டாளத்துக்கா ? (எழுதியவர் எஸ். பூமிநாதன்)

வியாழன் (2—5—1963)

காந்தியைப் போற்றுவோம்
நமது திட்டம்—
நூல் நிலையத் திட்டம்
மெல்லிசை
செய்தி விமர்சனம்

வெள்ளி (3—5—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வியும்—பதிலும்
2. கிராமத் தொண்டர் அணியும் தேசிய சேமிப்பும்.

சனி (4—5—1963)

உலகத்து நாயகியே (பாட்டு)
முதியோர் கல்விக்கூடம்—திருக்குறள் விளக்கம்
நம் மாதர் மன்றம்—
1. நமது பங்கு
2. குடும்பக்கட்டுப்பாடு ஏன் ?
3. சத்ய நெறி
4. நாட்டுப் பாடல் பயிற்சி

ஞாயிறு (5—5—1963)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
கிராமம் போவோமே : செய்தி சித்திரம்

திங்கள் (6—5—1963)

ஆகாசவாணி ஒலிப்பதிவுப் பாடல்கள்
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்
தொண்டர் அணி—இசைச் சித்திரம்
(என். ராகவன் அவர்கள் எழுதியது)

செவ்வாய் (7—5—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வியும்—பதிலும்
2. உயர்ந்த ரக நெல் வித்துக்கள்

புதன் (8—5—1963)

மூக்கடைப்பான் நோய்
புத்தர் பாடல்கள்
துறவு—என். வாசுதேவ் எழுதியது

வியாழன் (9—5—1963)

அன்பாய் இரு நெஞ்சே
நமது திட்டம்—
தேசிய முன்னேற்றமும் சிறு தொழிற்சாலைகளும்
மெல்லிசை
செய்தி விமர்சனம்

வெள்ளி (10—5—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வியும்—பதிலும்
2. சேவைக்கூட்டுறவு நாட்டிற்குத் தேவை

சனி (11—5—1963)

ஆதியே பரஞ்ஜோதியே
முதியோர் கல்விக்கூடம் : பாரதத்தின் வரலாறு
நம் மாதர் மன்றம்—
1. நமது பங்கு
2. எங்கள் கிராமத்தில்
3. சத்திய நெறி
4. நாட்டுப் பாடல் பயிற்சி.

ஞாயிறு (12—5—1963)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
நம் நாட்டு விவசாயி
கிராமியக் கலை

திங்கள் (13—5—1963)

ஆகாசவாணியின் ஒலிப்பதிவுப் பாடல்கள்
விலைவாசிகளின் வாராந்தர விமர்சனம்
வாடகையா ? வட்டியா ? (எஸ். பூமிநாதன் எழுதியது)

செவ்வாய் (14—5—1963)

திரைப்பட இசை
கிராம ரேடியோ மன்றம்—
1. கேள்வியும்—பதிலும்
2. நரம்பு சிலந்தியை தடுப்பது எப்படி?

புதன் (15—5—1963)

உலகெல்லாம்
யானைக்கால் நோயும் தடுப்பு முறையும்
நாட்டுப் பாடல்கள்
தங்கத் தூண்—எஸ். பூமிநாதன் எழுதியது

வியாழன் (16—5—1963)

கைத்தொழில் : ஒன்றை பாட்டு

நமது திட்டம்— பெரிய அம்மையை ஒழிக்கும் முறை

மெல்லிசை

செய்தி விமர்சனம்.

வெள்ளி (17—5—1963)

திரைப்பட இசை

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்
2. பள்ளி சீர் அமைப்புத் திட்டம்

சனிக்கிழமை (18—5—1963)

இன்பவானம்

முதியோர் கல்விக்கூடம்—திருக்குறள் விளக்கம்

நம் மாதர் மன்றம்—

1. நமது பங்கு
2. ஆப்பக்கார அங்காயி—தொடர்ச்சி சித்திரம்— என். வாசுதேவ் எழுதியது
3. சத்ய நெறி
4. நாட்டுப் பாடல் பயிற்சி.

ஞாயிறு (19—5—1963)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி

கிராம நாடக சபை

திங்கள் (20—5—1963)

ஆகாசவாணி ஒலிப்பதிவுப் பாடல்கள்

விலைவாசியின் வாராந்திர விமர்சனம்

சக்திவேலு சந்தேகப் புலி—எஸ். எம். அப்துல் காதர் எழுதியது.

செவ்வாய் (21—5—1963)

திரைப்பட இசை

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்
2. குறுவை நாற்றங்கால் தயாரிப்பு

புதன் (22—5—1963)

தேடி ஊன சரண்

தேயிலைத் தோட்டத்தில்—உரையாடல்

கிராம பொதுநல சங்கம்

நாட்டுப் பாடல்கள்

வியாழன் (23—5—1963)

தேசத் தொண்டர்கள்

நமது திட்டம்—
மூன்றாவது திட்டமும் அதிகமான தொழிற் சாலைகளும்.

மெல்லிசை

செய்தி விமர்சனம்.

வெள்ளி (24—5—1963)

திரைப்பட இசை

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்
2. கால்நடைகளின் கால், வாய், நோய்

சனிக்கிழமை (25—5—1963)

வாழலாம் மனமே

முதியோர் கல்விக்கூடம்—சங்க இலக்கிய விளக்கம்

நம் மாதர் மன்றம்—

1. நமது பங்கு
2. பெண்களும் தொண்டர் அணியும்
3. சத்ய நெறி
4. நாட்டுப் பாடல்—பயிற்சி.

ஞாயிறு (26—5—1963)

கிராமச் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி

கிராமச் சாவடி

தங்கத்துக்கு கல்யாணம் : வழக்கு விசாரணை

திங்கள் (27—5—1963)

ஆகாசவாணி ஒலிப்பதிவு பாடல்கள்

விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்

வளரும் தமிழகம்

செவ்வாய் (28—5—1963)

திரைப்பட இசை

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்
2. உணவு உற்பத்தியைப் பெருக்க காய்கறித் தோட்டம்

புதன் (29—5—1963)

வாழ்க காந்தி

ஆராய்ச்சிக்கூடம்—உரையாடல்

செய்தித் தொழில்

நாட்டுப் பாடல்கள்

வியாழன் (30—5—1963)

தாயே வந்தனம்

ஒன்றே குலம்

மெல்லிசை

செய்தி விமர்சனம்

வெள்ளி (31—5—1963)

திரைப்பட இசை

கிராம ரேடியோ மன்றம்—

1. கேள்வியும்—பதிலும்
2. விபத்துகளும் முதலுதவியும்—தி விபத்து



உள்ளமைந்த கேம்பர் மற்றும் உயர்ந்த இடைவெளியுடன் கூடிய வால்டாஸ் மாட்டு வண்டியின் சுமையற்ற மற்றும் சுமையேற்றிய நிலைகளை வரைபடங்கள் காட்டுகின்றன

VOLTAS வால்டாஸ் 2-டன் மாட்டுவண்டி

இருமடங்கு பாரத்தை பிரயாசையின்றி மிக எளிதாக ஏற்றிச் செல்லுகிறது

இந்தியாவிலேயே மிகச் சிறந்த நவீன விவசாய இயந்திரக் கருவித் தயாரிப்பாளர்களான வால்டாஸ் ஸ்தாபனம் இந்தியாவின் மிகப் பழைய போக்குவரத்து சாதனமாகிய மாட்டு வண்டியை நம் இந்திய விவசாயிகளுக்கு ஏற்ப மிக நவீன முறையில் தயாரித்து அளிக்கிறது.

இந்த வால்டால் 2 டன் மாட்டுவண்டி விவசாயப்பண்ணை சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளுக்கும் ஏற்றவாறு வால்டாஸ் ஸ்தாபனத்தின் நிபுணர்களால் பரிசீலிக்கப்பட்டு நன்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

* வால்டாஸ் மாட்டு வண்டியில் காற்றடைக்கப்பட்ட ரப்பர் டயர் சக்கரங்கள் பொருத்தப்பட்டிருப்பதால் மாடுகள் சிறிதும் சிரமமின்றி எளிதாக சுமைகளை இழுக்கின்றன ஆகவே சாதாரண வண்டிப்பாரத்தைவிட அதிக பாரத்தை ஏற்ற முடிகிறது.
* வால்டாஸ் 2 டன் மாட்டு வண்டியின் பிரேம்கள் (உடலமைப்பு) மிக உறுதியான அழுத்தப்பட்ட எஃகுச் சட்டங்களினால் அமைக்கப்பட்டிருக்கிறது. இது மரத்தைவிட கனம் குறைவானது. அனாவசியமான அதிகப்படி பாரத்தைக் குறைக்கிறது. வால்டாஸ் 2 டன் மாட்டு வண்டி ஒன்றுதான் சாதாரண மாட்டு வண்டியின் பாரத்தைப் போல சரியாக இரு மடங்கு பாரத்தைக் குறைக்கிறது.
* வண்டியில் உயர்ந்த வில் (26" இடை வெளியுள்ளது.) அமைக்கப்பட்டிருப்பதால் கரடுமுரடான நாட்டுப்புறப் பாதைகளிலும், தடங்களிலும், வயல் வெளிகளிலும் சுலபமாக வண்டியைச் செலுத்திச் செல்லமுடிகிறது.
* உள்ளமைந்த கேம்பர் வண்டியின் பாரத்திற்கும் பாதையின் மேடுபள்ள நிலைக்கும் தக்கவாறு தாமாகவே இயங்கி சக்கரங்களை சம நிலைப்படுத்துகிறது. சக்கரங்கள் தடங்கலின்றி சுலபமாக உருளுகின்றன. குலுக்கல்களும்—ஆட்டங்களும் தவிர்க்கப்படுகின்றன. உங்கள் விலையுயர்ந்த மாடுகளின் கழுத்து புண்ணுவது தவிர்க்கப்படுகின்றன.

வால்டாஸ் 2 டன் மாட்டு வண்டி – ஒவ்வொரு விவசாயியும் மிக விரும்பித் தேர்ந்தெடுக்கப்படும் வண்டி.—

VOLTAS வால்டாஸ் லிமிடெட்
விவசாய இயந்திரப்பகுதி
கிஞ்ச்போக்லி ரோடு. பம்பாய்-33

கல்கத்தா • புது டெல்லி • சென்னை • பெங்களூர் • கொச்சி
ஆமதாபாத் • செகந்தராபாத் • போபால் • நாக்பூர் • [illegible]
கோயமுத்தூர் • மதுரை.

VOL 833 TAM EVEREST



படம் 1

படம் 2

உணவு பெருக்க வார விழா

படம் 1.—ஊர்வலத்தில் அணிவகுத்துச் செல்லும் N. C. C. மாணவிகள்.

படம் 2.—ஊர்வலத்தில் அலங்காரமாய்ச் சென்ற தனியார், சர்க்கார் துறை ரதங்கள்.

படம் 3.—விழாவின் கண்காட்சியில் வைக்கப்பட்ட கோழிக் கூண்டுகள்.

படம் 4 & படம் 5 —விழாவில் நடந்த சலா நிகழ்ச்சிகள்.



படம் 3

படம் 4



படம் 5



Regsitered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1963



மேல்படம் & கீழ்படம் : தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்த அமெரிக்க விவசாயிகள் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கக்கன், உணவு விவசாயத் துறை காரியதரிசி திரு. S. விஸவநாதன், I. A. S., வேளாண்மைத் துறை நெறியாளர் திரு. V. கார்த்திகேயன், I. A. S., கால்நடைத் துறை நெறியாளர் டாக்டர் I. D. மந்திரமூர்த்தி முதலியோருடன் கருத்துப் பரிமாரிக்கொள்ளுதல்.

நடுப்படம் : மத்திய துணை அமைச்சர் திரு. C. R. பட்டாபிராமன் அவர்கள் 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 8-ந் தேதி அன்று திருவான்மியூரில் நடந்த காய்கறி பெருக்க விழாவில் கலந்துகொண்டார். திருமதி சரோஜினி வரதப்பன், பார்வதி சீனிவாசன், பாரத் சேவக் சமாஜ் அங்கத்தினர்களையும் காணலாம்.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, விவசாய இலாகா தலைவரால் வெளியிடப்பட்டது.